(இ) — 3 உ 5

# நயன நூல்

## நவநீதம்.

2
14452



தஞ்சை டாக்டர்,

S. அமிர்தலிங்கம்பிள்ளை.

T000002
Sarasvati Mahal Library. Thanjavur

# நயன நூல் நவநீதம்

தஞ்சை. Dr., S. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள்

வெள்ளைக்கொம்பன் விநாயகனைத்தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே

எல்லாம் வல்ல இறைவனால் நமக்குக்கொடுக்கப் பட்டிருக்கும் பஞ்சேந்திரியங்களுள் கண் பிரதானமான உறுப்பாக விளங்குகின்றது. இவ்வுறுப்பிற்கு நயனம், நேத்திரம், அக்கம், நாட்டம், கோ, விழி, அக்கம், திருக்கு, திட்டி, திருட்டி, அம்பகம், எனப் பெயர்கள் வழங்கும்.

கண்ணின் அமைப்பு

1. கண்ணானது உருண்டை வடிவமாய்த் தலையோட்டின் முற்பகுதியிலிருக்கும் குழியிலே பதிக்கப் பட்டிருக்கின்றது. கண்விழி மூன்று சவ்வுப்படலங்கள் உள்ளதாயிருக்கும். இச் சவ்வுப் படலங்களுக்குள்ளே **சுவச்சங்க**மென்னும் நீர் வகைகள் நிறைந்திருக்கின்றன. முற்கூறிய மூன்று சவ்வுப்படலங்களுள் முதல் சவ்விற்கு **கடினை** யென்று பெயர். இதனை ஆங்கிலேயர் Sclerotic என்பர். இது கடினமாயிருத்தல் பற்றி இதற்குக் கடினை யென்ற பெயருண்டாயிற்று. இரண்டாவது சவ்வு **சிருங்கை** யென்று சொல்லப்படும். இதற்கு ஆங்கிலத்தில் Cornea என்று பெயர். சிருங்கம் என்பது கொம்பு என்று பொருள்படும். இச்சவ்வு விலங்கின் கொம்பைப்போல வன்மையாயிருப்பதாலும் விலங்கின் கொம்பானது மரங்களின் பட்டை, வெடிப்பு வெடிப்பாக இருப்பது போல் அதிக உஷ்ணத்தினால் வெடித்துக் காணப்படுமாகையாலும், இதற்கு சிருங்கமெனும் பெயர் ஏற்பட்டது. கடினை, சிருங்கை யென்ற இவ்விரண்டு சவ்வுகளும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுள்ளன. இவற்றை வெவ்வேறாகப் பிரிக்கமுடியாது. இவ்விரண்டு சவ்வுகளாலாகிய கவசம் முதற்படலமாகும்.

2. இரண்டாவது படலம் **தரணிசம்**, **வருணி**, **பரிதிகம்**, ஆகிய மூன்றினாலாயது.

தரணிசமென்னும் சவ்வு, கருநிறமுள்ளதாய் கண்ணினுள்ள பல பகுதிகளையும் போஷிக்கின்ற நுண்ணிய பல இரத்தக் குழல்களினால் வலைபோல் பின்னப்பட்டிருப்பது. இதற்கு ஆங்கிலத்தில் Choroid என்று பெயர்.

வருணியென்பது ஓர் சவ்வு. அதன்மேல் ஏழு மண்டலங்களமைக்கப் பட்டிருக்கின்றன.

I **நிர்த்த மண்டலம்.** இதை தாரையென்றும் பாவையென்றும், பிள்ளைப்பாவை யென்றும், பிள்ளைக்குழியென்றும், அண்ணைப்பிள்ளை யென்றும், கிருஷ்ண னென்றும், பாப்பாவென்றும், மையென்றும், உலகத்தவர் சொல்வதுண்டு. இது கருவிழியின் மத்தியில் காணப்படும் கரும்புள்ளியாகும். இது கண்ணிற்படும் வெளிச்சத்துக்குத் தக்கதாய் கொஞ்ச வெளிச்சத்திலே விரிந்தும், அதிக வெளிச்சத்திலே சுருங்கியும், நிற்குந் துவாரம். இதற்கு ஆங்கிலத்தில் Iris என்று பெயர். மஹாராட்டிர பிராமணர்களுக்குள்ளும், மஹாராட்டிரருக்குள்ளும், குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் பாஞ்சவி என்று ஓர் விசேஷம் நடப்பதுண்டு. அன்று இரவில் நாடகங்கள் ஆடச்செய்தும் வாத்தியங்கள் முழக்கியும் தூங்காது விழித்துக்கொண்டு சாக்கிரதையா யிருப்பர்கள். அவர்களை இதற்குக் காரணம் யாதென்று வினவில், கடவுளானவர் புதிதாய்ப் பிறந்த குழந்தைக்கு நிர்த்தமண்டல மென்று சொல்லப்பட்ட கரும்புள்ளியை எழுதுவதற்காக வருவார்; அப்போது படுத்துறங்குவது மரியாதையல்ல வென்றும், விழிப்புக்குக் காரணமாக நாடகங்களையும், வாத்தியங்களையும், தங்கள் வீட்டில் ஏற்படுத்துகிறோ மென்றும் சொல்லுகிறார்கள். தமிழர்களுக்குள்ளேயும் ஓர் வழக்கமுண்டு. அதாவது சுவாமி படங்களெழுதும் போது முற்றிலும் எழுதியான பின்பு, கடைசியாக கண் திறப்பதும் விக்கிரகங்களை வார்த்து பிரதிட்டை செய்யும்போதும், கடைசியாக கண் திறப்பதையும் நாம் காண்கிறோம்.

II **பீதமண்டலம்**-பீதம் என்பது மஞ்சள். இது நிர்த்த மண்டலத்திற்கடுத்தாப் போலிருக்கும் மஞ்சள் நிறமுள்ள ஓர் வகை நீராலாகிய வட்டம்.

III **சோண மண்டலம்**-சோணம் என்பது சிவப்பு. இது பீத மண்டலத்திற்கடுத்தாப் போலிருக்கும் சிவப்பு நிறமுள்ள ஓர் வகை நீராலாகிய வட்டம்.

IV **ஹரிதி மண்டலம்**-ஹரிதி என்பது பச்சை. இது சோண மண்டலத்திற் கடுத்தாப்போலிருக்கும் பச்சை நிறமுள்ள நீராலாகிய வட்டம்.

V **தூம்ர மண்டலம்**-தூம்ரம் என்பது புகை. இது ஹரிதி மண்டலத்திற் கடுத்தாப் போலிருக்கும் புகை நிறமுள்ள ஓர் வகைநீராலாகிய வட்டம்.

VI **சோதி மண்டலம்**-இது தூம்ரமண்டலத்திற் கடுத்தாப் போலிருக்கும் வெண்ணிறமுள்ள ஓர் வகை நீராலாகிய வட்டம்.

VII **நிசாசர மண்டலம்**-இது சோதி மண்டலத்திற்கடுத்தாப் போலிருக்கும் கருநிறமுள்ள ஓர்வகை நீராலாகிய வட்டம். (நிசி + சரம் = நிசாசரம்)

நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போது அப்பொருள் வட்டமாயிருக்கிறதா, சதுரமாயிருக்கிறதா, கோணமாக விருக்கிறதா, என்பது போன்ற விஷயங்களை நமக்குணர்த்துவது, நிர்த்தமண்டலம். அப்பொருளின் நிறத்தைப் பார்க்கும்போது மஞ்சள் நிறமாயிருப்பின் பீத மண்டலமும், சிவப்பாயிருக்குமாயின் சோணமண்டலமும், பச்சையாயிருக்குமாயின் ஹரிதிமண்டலமும், கறுப்பாயிருப்பின் தூம்ர மண்டலமும், வெண்மையா யிருப்பின் சோதி மண்டலமும் நமக்கு நிறங்களையுணர்த்துகின்றன. இரவிலே நாம் நடமாடுவதற்கு உதவியாயிருப்பது நிசாசர மண்டலமாகும்.

இவ்வேழு மண்டலங்களும் ஒன்றோடொன்று அடுத்திருப்பதினாலாகிய முழுவட்டத்திற்குப் **பரிதிகம்** என்று பேர் இதற்கு ஆங்கிலத்தில் Ciliary body என்று பெயர் கூறப்படும். இவ்வேழுமண்டலங்களின் தொழிலைப்பற்றி அனுபவ சித்தமான ஓர் திருஷ்டாந்தத்தைக் கூறுவாம்.

வாசிப் பழக்கமுள்ளவர் தம் நாசியில் ஓடும் சுவாசத்தில் பஞ்ச பூதங்களில் இன்ன பூதம் நடக்கிறதென்பதை நிறம், வடிவம், இடம், சுவை, நீட்சி என்னும் இவைகளால் அறிவதற்கு உபாயம் ஞான நூல்களில் கூறப்பட்டுள்ளது.

இரண்டு பெருவிரல்களால் இரண்டு காதுகளையும், ஆட்காட்டி விரல்களால் இரண்டு கண்களையும், நடுவிரல்களிரண்டினால் நாசியையும் மற்ற விரல்களினால் வாயையும், அழுத்திக்கொண்டு உட்கார்ந்து நிதானிப்பதற்கு சண்முகி முத்திரையென்று பெயர். இவ்வாறு யோகிகள் நிதானிக்கும்பொழுது பிருதிவி நடக்குமாயின் மஞ்சள் நிறம் காணப்படும். அப்பு நடக்குமாயின் வெண்ணிறம் காணப்படும். தேயு நடக்குமாயின் சிவப்பு நிறம் காணப்படும். வாயு நடக்குமாயின் கருநிறம் காணப்படும். ஆகாசம் நடக்குமாயின் பல வர்ணங்கள் காணப்படும். இவ்வாறு காணப்படுவது எங்ஙனமெனில் பிருதிவி பூதம் நடக்கும்போது பிருதிவியின் நிறம் மஞ்சளானதால் தன் இனமான மஞ்சள் நீராலாகிய வட்டமாக அமைந்து கிடக்கும் பீதமண்டலத்தை சுவாசம் இயக்க மஞ்சள் நிறமும், அப்பு நடக்கும்போது அப்புவின் நிறம் வெள்ளையானதால் தன் இனமான வெண்ணிறமுள்ள நீராலாகிய வட்டமாக அமைந்து கிடக்கும் ஜோதி மண்டலத்தை சுவாசம் இயக்க வெண்ணிறமும், தேயு நடக்கும்போது தேயுவின் நிறம் சிவப்பானதால் தன் இனமான சிவப்பு நிறமுள்ள நீராலாகிய வட்டமாக அமைந்து கிடக்கும் சோண மண்டலத்தை சுவாசம் இயக்க சிவப்பு நிறமும், வாயு நடக்கும்போது வாயுவின் நிறம் கறுப்பானதால் தன் இனமான கரு நிறமுள்ள நீராலாகிய வட்டமாக அமைந்து கிடக்கும் தூம்ர மண்டலத்தை சுவாசம் இயக்க கரு நிறமும், ஆகாச பூதம் நடக்கும்போது ஆகாசத்தின் நிறம் பலவர்ணமானதால் தன் இனமான பல வர்ணங்களாக அமைந்து கிடக்கும் எல்லா மண்டலங்களையும் சுவாசம் இயக்க பல வர்ணங்களும் காணப்படுகின்றன.

முற்கூறிய அநேக நுண்ணிய இரத்தக் குழல்களினால் வலை போல் பின்னப்பட்ட தரணிசம் என்னும் சவ்விற்கு அடுத்தாற்

போல உட்பக்கமாயிருக்கும் அதிக மெல்லிய வெள்ளைச் சவ்வு ஒன்று இருக்கிறது. அதற்கு **தரிசியம்** அல்லது **தரிசனீயம்** என்று பெயர். ஆங்கிலத்தில் Retina என்று பெயர். நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போது அப்பொருளின் உருவம், புகைப்படம் பிடிக்கும் கருவியின் முற்பக்கத்திலமைக்கப்பட்டிருக்கும் இருபுறமும் குவிந்த கண்ணாடியின் (Lens) ஊடே எதிரே காணப்படும் பொருளின் பிரதி பிம்பம் சென்று அக் கருவிக்குள் வைத்திருக்கும் மருந்து பூசிய தட்டைக் கண்ணாடியில் பற்றுவதுபோல் இந்த தரிசியம் அல்லது தரிசனீயம் என்று சொல்லப்பட்ட சவ்வில், காட்சிப்பொருளின் பிரதிபிம்பம் கண்ணைப் பிடித்துக்கொண்டிருக்கும் நரம்பின் மத்தியிலிருக்கிற பார்வை நரம்பின் வழியாய்ச் சென்று, கண்ணைப் பிடித்துக் கொண்டிருக்கும் நரம்பின் (Optic Nerve) மற்றொரு நுனி தலை மூளையில் சம்பந்தப்பட்டிருப்பதாலும், மூளை அறிவிற்கிருப்பிடமாயிருப்பதாலும், பொருள்கள் காணப்படுகின்றன. தரிசியம் என்ற சவ்வானது ஓர் தாமரை யிலையைப்போலும், கண்நரம்பு (Optic Nerve) அதன் தண்டைப்போலு மிருக்கிறது.

இனி கண்ணுக்குள்ளிருக்கும் நீரைப்பற்றிப் பேசுவோம். அந்த சுத்தமான நீருக்கு **சுவச்சம்** என்று பொதுப்பெயர் கூறப்படும். அது நெய் போன்ற ஒருவகை நீர். அது **வனம், இயவம், படிகம்** என மூன்று வகைத்து. அவற்றுள் **வனமாவது**, வருணியென்னும் சவ்வு தன்னிடத்தில் மிதக்கும்படி அதற்கு முன்னும் பின்னுமாக விருப்பது.

**இயவமாவது** பளிங்குக்கு சமானமாய் (Transparent) ஒளி ஊடுருவத் தக்கதாக இருப்பது. **படிகமாவது**, இயவத்திற்கு, அடுத்தாற் போலிருப்பது. அதனுடைய நிறமும், தடிப்பும் சற்றேறக் குறைய கோழி முட்டையின் வெள்ளைக் கருவுக்குச் சமானமாயிருக்கும். அது கண்ணின் உள்ளரையின் உட்பகுதியிலே மூன்றில் இரண்டு பங்கு நிரம்பியிருக்கும்.

வனம் என்ற நீருக்கு ஆங்கிலத்தில் Aqueous Humor என்றும், இயவம் என்ற நீருக்கு Crystalline Lens என்றும்,

படிகம் என்ற நீருக்கு Vitreous Humor என்றும் பெயர் கூறு வார்கள். கட்குழிக்குள்ளே நிணம் நிரம்பியிருக்கின்றது. அதன் உதவியால் கண் தாராளமாய் எப்பக்கங்களிலேயும் சுழலும். கண் இமைகள் உரப்பாயிருக்கும்படியான **முருந்து** என்னும் ஒரு வகையான சிறு நரம்புகளாலும், **பேசி** என்னும் ஒரு வகை யான தசையினாலும், அமைக்கப்பட்டிருக்கின்றன.

மேலிதழ் இமையென்றும் கீழிதழ் குவளையென்றும் கூறப்படும். இவ்விரண்டினையும் இமையென்றும், குவளையென் றும், இதழென்றும், மடலென்றும், விளிம்பென்றும் பாகு பாடின்றிக் கூறுவது உலகவழக்கு. கண்ணை மூடித் திறக்கும் பொழுது இமை அசையும், குவளை அசைவற்றிருக்கும். கம்ப ராமாயணத்தில்,

"எண்ணுதற் காக்கரிது இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்

என்ற செய்யுளில் முனிவருக்காக அமைத்திருந்த வேள்விச் சாலையை இராமரும் இலக்குமணரும் காவல் செய்தார்களாம். எவ்வாறெனில் இலக்குமணரை வாயிலில் உட்காரச்செய்து ஸ்ரீராமர் வேள்விச் சாலையை சுற்றி வருவாராம். வாயிலில் வரும் போதெல்லாம் இலக்குமணா ஜாக்கிரதை என்று கூறுவாராம். ஆகவே இங்குக் கொள்ள வேண்டியதென்னவெனில் ஸ்ரீஇராமர் வயதில் உயர்ந்தவர். இலக்குமணர் வயதில் சிறியவர். இமை மேலே யிருப்பதால் இராமருக்கு ஒப்பாகும். குவளை கீழே யிருப்பதால் இலக்குமணருக்கு ஒப்பாகும். கண்ணினை இமைக் கும்போது குவளை இருந்தவிடத்திலேயே இருக்கிறது. இமை மேலே யிருந்து கீழே வந்து குவளையை சந்திக்கிறது என்னும் பொருளை கம்பர் அடக்கியிருப்பதைக் காண்க.

கடைக்கண் பக்கமாக இருக்கும் **பேசி**யென்னும் தசை யானது குறுகலாயிருந்தால், கண்ணும் அப்பக்கமே இழுபட்டு விழிகள் மூக்கை நோக்கி நிற்கும். இப்படியிருக்கும் கண் ணாக்குக்கண் என்றும் மாறுகண் என்றும் ஒன்றரைக்கண் என்

றும் சொல்லப்படும். ஆங்கிலத்தில் இதனை Squint eye என்று கூறுவார்கள். மனிதர் கண்களிவ்வாறமைக்கப்பட்டிருக்க, மிருகங்களுக்கு பார்வைக்காதாரமான நிர்த்தமண்டலமென்றுசொல்லப்படும் தாரையானது ஒருவிதமாயும், பட்சிகளுக்கு ஒரு விதமாயும் இரவிலே இரைதேடித் திரியும் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் ஒரு விதமாயும், தலை கீழாகத் தொங்கும் வௌவாலினங்களுக்கு ஒருவிதமாயும், கண்ணே காதாகவுடைய சர்ப்பங்களுக்கு ஒரு விதமாயும் அமைக்கப்பட்டிருக்கிறது. இஃதன்றிக் காகத்திற்கு கண்களிரண்டிருந்தும் பார்வையைக்கொடுக்கா நின்ற தாரையானது ஓர் உண்டை வடிவமா யமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வுண்டையானது எந்தப்பக்கத்துக் கண்ணினால் பார்க்க இஷ்டப்படுகிறதோ அந்தப் பக்கமாய் தலையைச்சாய்க்க அக்கண்ணில் ஓடி வந்து பார்வையைக் கொடுக்கிறது. இதற்குப் பிரமாணம்: சைவசமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையாரில்,

"காகத்திரு கண்ணிற் கொன்றே மணிகலந்
தாங்கிருவ ராகத்து ளோருயிர் கண்டனம்"

என்று கூறப்பட்டிருப்பதைக் காண்க.

கண்ணில்லாமலே சில ஜீவராசிகளைக் கடவுள் படைத்திருக்கிறார். அவை எறும்பு, செல்லு முதலியன. அவை எப்படி ஊர்கின்றனவென்றால் அவற்றிற்கு முகத்திலே இரண்டு பரிசனைகளைப் (Feelers) படைத்திருக்கிறார். அவற்றைக்கொண்டு உணர்ந்து செல்லுகின்றன. இச்சீவராசிகள் "மூக்கறிவின் மூவறிவுயிர்" எனப்படும். இதற்குப் பிரமாணம்,

"சிதலெறும் பாதி மூக்கறிவின் மூவறிவுயிர்"

என்பது நன்னூல் சூத்திரம்.

இதுவரை கண்ணைப்பற்றிய வியூகனம் (Anatomy) என்னும் சாத்திரத்தைக் கூறினோம். இனிக் கண்ணின்தொழிலைக் கூறுவோம்.

## அதிகாரம் 2.

### கண்ணின் தொழில்

கட்புலனுக்கு வெளிச்சம் அவசியம் வேண்டியதாகையால்

கண்ணிலுள்ள பல பகுதிகளின் பிரயோசனமின்னதென்று அறியும்படிக்கு வெளிச்சம் செல்லும் ஒழுங்கு இன்னதென்று முதலில் அறியவேண்டும்.

அது நால் வகைப்படும்

1. ஒளியானது ஒரே வஸ்துவின் வழியாகப் பாயும்போது சரிநேர் வரியாகச் செல்லும்

2. ஒரு வஸ்துவிலிருந்து ஒளியானது மற்றொரு வஸ்துவினூடே செல்லும்பொழுது அதின்போக்கில் மடங்கி அல்லது வளைந்து செல்லும். இப்படி ஒளிவளைந்து செல்வதற்குக் கதிர் மடங்கல் அல்லது வக்கிரிகரணம் (Refraction) என்று பெயர்

3. ஒரு வஸ்துவிலிருந்து அதின் கிரணங்கள் எவ்வளவு தூரமாகப் பாயுமோ, அவ்வளவாக அவைகள் ஒன்றுக்கொன்று அகன்று விரியும்

4. ஒரு வஸ்துவிலிருந்து அதன் கிரணங்கள் கண்ணுக்குள் செல்லும்பொழுது ஒன்றுக்கொன்று கத்தரிக்கோல்போற் குறுக்கிட்டுச் செல்லும்; இதனால் அவ்வஸ்துவினுருவம் அடிநுனி மாறிக் கண்ணின் பிற்பக்கத்திலுள்ள தரிசியத்திலே விழுகின்றது. கண்ணுக்குள்ளே அளவுக்கு மிஞ்சிய வெளிச்சம் படாதபடிக்கும் தூசி முதலியவைகள் கண்ணுக்குள் விழாதபடிக்கும் கண் இமைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக அகண்ட வெளிச்சத்தை யுண்டுபண்ணுகிற மின்னல் உண்டாகும்போது கண்ணிமைகள் தானே மூடிக் கண்ணைக் காப்பாற்றுகின்றன. கோழி முதலிய சில பறவைகளுக்கு கடவுள் இமைக்குள் ஓர் பளிங்கு இமையை அமைத்திருக்கிறார். அது அவைகளுக்கு மிக்க உபயோகமானவை. எப்படியென்றால் கோழி குப்பைகளிலும் மண்ணிலும் படுத்துக்கொண்டு தன் கால்களால் தூசிகளைக் கிழித்துச் சீய்க்கும்போது மேலிமைகளைத் திறந்து கொண்டிருக்கும். பளிங்கு இமைகளைக்கொண்டு மூடி, கண்ணைக் காப்பாற்றிக்கொள்ளும்.

அதிக சிரமப்பட்டு வேலைசெய்யும்பொழுது நெற்றியிலுண்டாகும் வியர்வை நீர் கண்ணிலே வடியாமல் புருவங்களமைக்கப்

பட்டிருக்கின்றன. கடைக்கண் பக்கமாய் **கண்ணீர்க் கோள** மிருக்கிறது. அதிலிருந்து நீர் ஊற்றுஜலம் ஊறுவதுபோல் சில நுட்பமான துவாரங்களின் வழியாய்க் கண்ணிலே பரவிக் கண்கள் எப்பொழுதும் பசுமையாகவும், பளபளப்பாகவும் இருக்கச் செய்கின்றது. மேலும் கண்ணிலே அழற்சிகாணும் பொழுதும், மனதிலே சஞ்சலம் உண்டாகும் வேளையிலும் கண்ணீரானது மூக்குக்கடுத்த கடைக்கண் பக்கமாயிருக்கும் இரண்டு குழல்களின் வழியாய் மூக்கிலே சென்று அளவுக்கு மிஞ்சி ஊறுவதால் மூக்கு வழியாயும் கண் வழியாயும் நீர்வழிகின்றது.

## அதிகாரம் 3.

### வெள்ளெழுத்து Long sight.

வயது சென்றவர்களுக்கு சிருங்கையும், இயவமும் தட்டையாவதினால், காணப்படும் பொருள்களின்உருவம் தரிசியத்திலே சரியாய் விழாமல் அதற்கப்பால்கடந்து செல்ல வெள்ளெழுத்துண்டாகின்றது. இதற்கு ஆங்கிலத்தில் long sight என்று பெயர். இக்குறையை நிவர்த்தித்துக் கொள்ள இருபுறமும் மேடான கண்ணாடி போட்டுக் கொள்ளவேண்டும். சிருங்கையும் இயவமும எவ்வளவு தட்டையாயிருக்கின்றனவோ அவ்வளவு மேடுள்ள கண்ணாடிதான் கண்ணுக்குப் பொருந்தும்.

குறுகின பார்வை **Short sight** பிறப்பிலேயே சிலருக்கு சிருங்கையும் இயவமும் மட்டுக்கு மிஞ்சி மேடாயிருக்கும். அப்படிப் பட்டவர்களுடைய கண்ணிலுள்ள தரிசியத்தில் காணப்படும் பொருள்களின் உருவம் சரியாய் எட்டாமல் நிற்கும். அது குறுகின பார்வை என்னப்படும். ஆங்கிலத்தில் short sight என்பார்கள். அத்தகையோர் இக்குறையை நீக்கிக்கொள்ளும் பொருட்டு இருபுறமும் குழிந்த கண்ணாடியைப் போட்டுக் கொள்ளவேண்டும். சிருங்கையும் இயவமும் எவ்வளவு மேடாயிருக்கின்றனவோ அவ்வளவு குழியாயுள்ள கண்ணாடிதான் கண்ணுக்குப் பொருந்தும்

வெள்ளெழுத்திற்கும் குறுகின பார்வைக்கும் கண்ணாடி போடவேண்டியவர்கள் தங்களுக்கு அகப்படும் கண்ணாடி எது வாயிருந்தாலும் அதையே போட்டு வருகிறார்கள். இப்படிச் செய்வதினால் கண் பார்வை கெட்டுப்போம். கண்ணாடி போட வேண்டியவர்கள் கண்ணாடிக் கடைக்குப் போய் கண்ணாடிகளைப் போட்டுப் பார்த்து பார்க்கிற பொருளைப் பெரிதாகவும் சிறிதாகவும் காட்டாமல் உள்ளபடி தெளிவாகக் காட்டக் கூடியதைத் தெரிந்தெடுத்து உபயோகிக்கவேண்டும்.

## அதிகாரம் 4.

### குணவாகடம்

#### நல்ல கண்ணின் இலட்சணம்

வெள்ளை விழியானது எவ்வித சிவப்பு நிறமுமில்லாமல் நல்ல படிகம்போல் வெண்ணிறமாயும் சோதியென்று சொல்லப் பட்ட தாரையானது கருநிறமாயும் அந்த தாரையில் பார்ப்பவர் முகமானது நன்கு தெரியும்படியாயுமிருந்தால் அந்தக் கண் நல்ல கண்ணென்று சொல்லப்படும்.

#### கண்ணின் நீள அகலம்

கண்ணின் நீளம் இரண்டங்குலம். அகலம் அரையங்குலம். ஆழம் ஒரு அங்குலமாகும் கண்ணிலுள்ள கருவிழியானது கண்ணில் மூன்றிலொருபாகமாகும். சோதியெனப்படும் தாரையானது கருவிழியிலேழிலொரு பங்காகும்.

#### பார்வை

மனிதர் பார்வையானது எட்டுவகைப்படும் அவையாவன. 1 சமம், 2 ஆலோகிதம், 3 சாசி, 4 ப்ரலோகிதம், 5 நிமீலிதம், 6 உல்லோகிதம், 7 அநுவிருத்தம், 8 அவலோகிதம்

1 சமதிருஷ்டி என்பது கண்ணை இமைக்காமல் விழித்தபடியிருத்தல். இப்பார்வை ஆச்சரியப்படும்பொழுது ஏற்படும்

2 ஆலோகித திருஷ்டி என்பது கண்ணை வேகத்துடன் சக்கராகாரமாகச் சுற்றிப்பார்த்தல். இப்பார்வை ஒருபொருளில் இச்சைப்படும் பொழுது ஏற்படும்.

3 சாசி திருஷ்டி என்பது கண்ணை இருக்கிறபடியே நிறுத்திப் பிறகு கடைக்கண் பார்வையாய்ப் பார்த்தல். இப்பார்வை ஒருவனுக்குக் குறிப்புக்காட்டும் பொழுது ஏற்படும்.

4 பிரலோகித திருஷ்டி என்பது கண்ணை கடைக்கண் இருபக்கங்களிலும் ஓடவிடுதல். இப்பார்வை இருபக்கங்களிலும் உள்ளபொருள்களை பார்க்கும்பொழுதும், புத்தி ஸ்திரமில்லாத காலங்களிலும் ஏற்படும்.

5 நிமீலித திருஷ்டி என்பது அரைக்கண் மூடிப்பார்த்தல். இப்பார்வை சூக்ஷுமமாகப் பார்க்கும்பொழுது ஏற்படும். ஆங்கிலத்தில் Straining என்று சொல்லப்படும்.

6 உல்லோகித திருஷ்டி என்பது மேலே பார்த்து விழியைக் கீழே இறக்குதல். இப்பார்வை யோசனையிலிருக்கும் போது ஏற்படும்.

7 அநுவிருத்த திருஷ்டி என்பது அதிவேகத்துடன் கீழும் மேலும் பார்த்தல். இப்பார்வை கோரத்தோடு பார்க்கும்போது ஏற்படும்.

8 அவலோகித திருஷ்டி என்பது கீழ்ப் பார்வையாய்ப் பார்த்தல். இப்பார்வை விசாரப்படும்பொழுது ஏற்படும்.

## கண்ணொளி

மனிதருக்கு முப்பத்தைந்துவரையில் கண் பார்வையில் எவ்வித வித்தியாசமு முண்டாகமாட்டாது. அதற்குமேல் பார்வை சிறிது புகைச்சலோடிருந்து நாற்பத்தைந்துக்குமேல் புகைச்சல் விலகிவிடும். அதற்குமேல் தூரத்துப் பார்வை ஐம்பத்தேழுவரையில் புகைச்சலோடிருக்கும். அதற்குமேல் பார்வை கொஞ்சம் கொஞ்சமாய் குறைவுபட்டுக் கொண்டே வந்து நூறு வயதான பிறகு பார்வை இருண்டுபோம்.

### வியாதி வருமாறு.

சிசுவானது தாயின் கெர்ப்பத்திலிருக்கும்பொழுது தாயின் வயிற்றில் கிருமிகள் சேர்ந்திருந்தாலும் தாயானவள் பசியால் வருந்தினலும், கலங்கும்படியான திகிலடைந்தாலும், மாங்காய், மாம்பழம் இவைகளை விரும்பித் தின்றாலும் சிசு பிறந்தவுடன் அதன் கண்களில் வியாதிகளுண்டாகின்றன. அநுபவத்தில், பிறந்த குழந்தைகளுக்கு அப்பொழுதே அமரமிருக்கக்கண்டு பண்டிதமும் செய்திருக்கிறோம்.

அதிக வெயிலினலும், காலில் வெயிலின் சூடேறுவதாலும், தடியினலடிபடுவதலாலும், தலையில் பாரம் சுமத்தலாலும், எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்து பகலில் உறங்குவதாலும், கூர்மையான பார்வையோடு வாசிப்பதாலும் கண்ணில் நோயுண்டாகும்.

இன்னும் தேகத்தில் உஷ்ணம் அதிகரித்தாலும் வயிற்றில் மந்தம் ஏற்பட்டாலும் உஷ்ணமான வண்டுணமலரென்று சொல்லப்பட்ட சண்பக மலர்போன்ற மலர்வகைகள், கோரோசனை கற்பூரம், நவச்சாரம் முதலியவைகளை முகர்வதாலும் உஷ்ணமான வெயிலிலலைந்து வந்து ஸ்நானம் செய்வதாலும் உஷ்ணம் அதிகப்பட்டு கண்ணில் நோயுண்டாகும். இவையன்றி நித்திரை பங்கப்படுவதாலும், நீண்ட தூரம் வெயிலில் போதலாலும், பத்தியம் காக்கும்போது காடி முதலிய புளிப்புப் பதார்த்தங்களை அருந்தலாலும், தேகத்தில் அதிக காற்றுப்படுவதாலும் கண்ணில் வியாதி உண்டாகும்.

இன்னம் மனவருத்தத்தாலும், பெண்கள் பேரில் மையல் கொள்வதாலும், வயிற்றில் பழயமலங்கள் சேர்ந்திருப்பதாலும், கவிழ்ந்த பார்வையாயிருந்து ஒரு தொழிலைச் செய்வதாலும், திரவிய நஷ்டமுண்டாவதாலும், ஓய்வில்லாமல் நீண்ட தூரம் நடத்தலாலும், அடிக்கடி கோபித்தலாலும் கண்ணில் வியாதி உண்டாகும்.

தண்ணீரை அதிகமாக அருந்துவதாலும், தேகத்தில் அதிக வறட்சி யுண்டாவதாலும் எண்ணெய் தேய்த்து முழுகும்

போது சிகையில் எண்ணெய் போகாமலிருந்தாலும், மேகத்தி லுண்டாகும் மின்னலைப் பார்ப்பதாலும், நெருப்பைப் பார்ப்ப தாலும், விரைவாக நடப்பதாலும், விரல்களில் நகங்கள் வளர்ந் திருப்பதாலும், அதிகமாய்த்தூங்குவதாலும் உண்ணும் ஆகாரத் தில் கல் கடி படுதலாலும், கல்லும் மயிரும் ஆகாரத்தோடு உட் செல்லுவதாலும், பாக்கு வெற்றிலையை கன்னக்குறடுகளில் அடக்கிவைத்தலாலும் கண்ணில் நோயுண்டாகும்.

இத்தகைய காரணங்களினாலும், திரிதோஷத்தாலும், கண்ணிலுண்டாகும் வியாதிகள் 96 தொண்ணூற்றாறாகும். அவற்றுள் வாதகோபத்தால் 45ம் பித்தகோபத்தால் 31ம் கப கோபத்தால் 20ம் தோன்றுகின்றன.

இன்னின்னவிடத்தில் இத்தனைநோய் என்பது.

ஜோதியென்று சொல்லப்பட்ட தாரையில் 27. கருப்பு விழியில் 10. வெள்ளை விழியில் 13. கருவிழிக்கும் வெள்ளை விழிக்குமிடையில் சந்து என்று சொல்லப்படுமிடத்தில் 9. மேல் இமையிலும் குவளையென்று சொல்லப்படும் கீழ் இமை யிலும் 24. கண் முழுவதும் உண்டாகும் நோய் 13. ஆக 96 வியாதிகளாகும்.

நோய் அணுகாதிருக்க உபாயங்கள்

ஆறுமாதத்திற்கொருமுறை வாந்தி மருந்தும், இரண்டு மாதத்திற் கொருமுறை பேதி மருந்தும், ஒரு மாசத்திற் கொரு முறை மூக்கிலே நசியமும், மூன்று நாட்களுக்கு ஒரு முறை கண் மருந்தும் உபயோகிக்கவேண்டும். முற்கூறிய நான்கு உபாயங்களில் பேதி செய்வதால் வாதம் குறையும், வாந்தி செய்வதால் பித்தம் தாழும், நசியம் செய்வதால் கபம் குறையும், கண்ணில் மருந்திடுவதால் கண்ணில் ஒப்பற்ற ஒளி யுண்டாகும்.

நோயணுகாதிருக்க மற்றோர் உபாயம் தந்தசுத்தி

ஆல், எருக்கு, வேலா, பூலா இவைகளின் குச்சியால் முன்னம் இடது பக்கத்தில் பல் தேய்க்க ஆரம்பித்து பிறகு

வலது பக்கத்தில் தேய்க்க கண்ணோய்கள் வாரா என்பது ஆயுர் வேதத்துணிபு.

கண் வைத்திய நூலாசிரியர்கள்.

ஜீவகாருண்யத்தை உத்தேசித்து கண் வைத்திய நூலை தமிழில் நாக முனிவர் என்பவர் 200 செய்யுட்களாலும், அகத்தியமுனிவர் 500 செய்யுட்களாலும், வீரபாண்டியன் என்பார் 95 செய்யுட்களாலும் கூறியுள்ளார். தேரையர் 600 செய்யுட்களாலும், புலஸ்தியர் 300 செய்யுட்களாலும் கூறியுள்ளாரென்பர். நூலை வைத்திருப்பவர்கள் வெளியிட்டால் பரோபகாரமாயிருக்குமென்பதிலையமில்லை. இவைகளைத் தவிர இத்தஞ்சையையாண்ட அமீர்சிங்மகாராஜா காலத்தில் அரண்மனைக் கண்வைத்தியரும் தமிழ்ப் புலவருமாயிருந்த பாவாகான் சாகேப் என்ற மகம்மதிய பண்டிதர் பல கண் வைத்திய நூல்களை ஆராய்ச்சி செய்து 23 காண்டங்களாக வகுத்து 1038 செய்யுட்களால் நயன வைத்திய நூலொன்று கூறியிருக்கின்றனர். இன்னும் எத்தனை மகான்கள் எத்தனை நூல்களை ஜீவகாருண்யத்தைக் கருதி செய்திருக்கிறார்களோ அறிந்திலோம். அவைகளை வைத்திருப்போர் செல்லுக்கிரையாக்கிவிடாமல் வெளிப்படுத்துவார்களாயின் நூலாசிரியர்களின் கருத்துக் கிணங்கியவராவர்.

முற்கூறிய நூல்களில் வீரபாண்டியர் என்பவர் அடியிற் கண்டவாறு வியாதிகளின் பெயரைக் கூறியிருக்கின்றனர் அவை சுக்கிலம், சூட்சி, பட்சம், சுக்கிரன், சுழிகண், சூகம், பகவன், பாணிகம், பலசம், வக்குடன், வருணன், வாகன், தியாகன், குடசன், விகடகன், பளிங்கன், விச்சன், நள்ளியன், நகிதகன், நபங்கன், கொள்ளுவன், சிவப்பன், சீனன், சீகன், சதிகன், தாரன், தாகிரன், பிதிகன், அருகன், பிலிகன், முதலிய பெயருள்ளனவாம். வியாதிகளின் தொகைமட்டும் தொண்ணூற்றாறாகக் கூறப்பட்டுள்ளன. இவர் மதுரையை ஆண்டுவந்த பிற்காலத்திய பாண்டியர்களிலொருவராக இருத்தல்வேண்டும். இவர் கூறியுள்ள வியாதிகள் இன்னவையென்று இக்காலத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆதலால் அது இக்காலத்தில் பயன்படுமாறில்லை.

### சந்திர தரிசனம்

கைவிரல்களை பல்கணிபோல் கோர்த்து அதன் வழியாக ஆகாயத்தில் மாசுகள் இல்லாத காலங்களில் சந்திரனைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து பிறகு கண்ணில் தண்ணீரை விட்டு அலம்பிவிட்டு கண்களைப் பிசைந்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால் கண்ணுக்குத் தெளிவுண்டாகும்.

### மற்றொரு விதம்

இரவில் சாப்பிட்டுவிட்டு கையலம்பிய பின்னர் கண்ணுக்குள் மூன்று துளி சுத்த சலத்தைவிட்டு இமைகளை நன்றாய்த் தேய்த்து ஒரு கடிகை நேரம் சந்திரனைப் பார்த்து வந்தால் கண்ணுக்கு அமிர்தபோகம் என்று சொல்லப்படும்.

### கண்டூஷம் பண்ணுதல்

கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, எலுமிச்சம் பழச்சாறு, தேன் இவைகளைச் சேர்த்து அரைத்து வாயிலிட்டுச் சிறிதுநேரம் அடக்கி வைத்திருந்து பிறகு வெந்நீரைக்கொண்டு வாயைக் கொப்பளித்து, கண்டத்திலே எண்ணெயையாவது அல்லது பசுவின் நெய்யையாவது பூச அது கண்டூஷமாகும். தமிழிலே இது கண்டூசம் என்று சொல்லப்படும். இதற்கு கண்டசுத்தி என்பது பொருள்.

### எண்ணெய் முகூர்த்தம்

மார்கழி, தை இந்த மாதங்களில் 2 கடிகை நேரமும், மாசி பங்குனியில் 3 கடிகையும், சித்திரை, வைகாசியில் 5 கடிகையும், ஆனி, ஆடி, ஆவணியில் 6 கடிகையும், மற்ற மாதங்களில் மும்மூன்று கடிகை நேரமும் எண்ணெயை சிரசில் ஊறவைத்து ஸ்நானம் செய்யவேண்டும்.

### மருந்திடும் நேரம்

ஆனி, அற்பசி, கார்த்திகை மாதங்களில் காலை நேரத்திலும், மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் மத்தியான நேரத்திலும், சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, புரட்டாசி, மாதங்களில் பதினெட்டு நாழிகைக்குள்ளும் மேலோர்கள் கண்ணில் மருந்திடுவார்கள்.

### பேதி முதலியவை செய்ய ஏற்ற காலம்

பேதி செய்வதற்கு காலை நேரமும், வாந்தி செய்வதற்கு ஒரு ஜாமத்திற்குள்ளும், நசியம் செய்வதற்கு பதினேழு நாழிகைக்குள்ளும், நரம்பு குத்துதல், சஸ்திரம் செய்தலாகிய இவைகட்கு காலை நேரமும், கொம்புவைத்து இரத்தம் வாங்குதற்கு மத்தியான நேரமும் அட்டைவிட்டு இரத்தம் வாங்குதற்கு சாயுங்கால நேரமும் ஏற்றவை.

### கண்ணில் மருந்திடக் கூடாத காலம்

மழை பெய்யும் பொழுதும், எண்ணெய் தேய்த்து முழுகின பிறகும், பெண்கள் வீட்டிற்கு விலக்காய் வெளியிலிருக்கும் பொழுதும், கண்ணுக்கு வெளியே பற்றுகள் போடுதலும், கண்ணுக்குள் மருந்துகள் இடுதலும் கூடாவாம். அவ்வாறு செய்தால் நோய் அதிகப்படும்.

### ஷட்ரசக்குணம்.

தித்திப்பினல் அதிக சுக்கிலமுண்டாகும்; கரிப்பினல் மேதையாகும்; துவர்ப்பினல் உதிரம் பெருகும்; கசப்பினல் எலும்பு வலுக்கும்; உறைப்பினல் மாமிசம் வளரும்; புளிப்பினல் எலும்பு நரம்புகளுக்குள் தசைவளரும்; உண்ணும் ஆகாரங்களில் உப்பு அதிகமானல் பித்தம் அதிகரிக்கும்; புளிப்பு துவர்ப்பு அதிகமானல் வாதம் அதிகரிக்கும்; தித்திப்பு, கசப்பு அதிகமானல் கபம் அதிகரிக்கும்.

### வைத்தியருக்குப் புத்தி கூறல்.

வைத்தியர்கள் கண்ணில் மருந்தைத் தீட்டும்பொழுது தமக்காக ஏற்படுத்தப்பட்ட ஆசனத்தில் வெண்ணெயைப் போல இலகுவில் இளகக்கூடிய களங்கமற்ற மனத்தோடு கிழக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு முதலில் இடது கண்ணில் மருந்தைவிட்டு பிறகு வலது கண்ணில் மருந்திடுவாராகில் குற்றமற வியாதியானது நீங்கும். கிழக்கு முகமாக உட்காரவேண்டிய காரணமென்னவென்றல் கண்ணுக்கு அதிதேவதை சூரியன். அவனுக்குக் கிழக்குதிசை உரியதானதால் இங்கு அத்திசையை ஆன்றோர் கூறினர்.

### அதிதேவதை விபரம்.

மாத்திரை யிழைக்கும் கல்லை மகாவிஷ்ணுவாகவும், மாத்திரையை லிங்கமாகவும், முலைப்பாலை அமுதமாகவும், மோதிர விரலை சிவனாகவும், சுண்டு விரலை நந்தி தேவராகவும், மருந்துப் பையை வைகுண்டமாகவும், பையைக் கட்டியிருக்கும் கயிற்றை சக்தியாகவும், பாவித்து பெருவிரலைக் கொண்டும் நடுவிரலைக் கொண்டும் மாத்திரைக் கோலைப்பிடித்து கண்ணில் மருந்திடல் வேண்டும்.

மாத்திரை இழைக்க உரைகல் செய்யும் வகை குருந்தக்கல் ஒன்றை எடுத்து மூன்று அங்குலம் நீளம், மூன்று அங்குலம் அகலம், ஒன்றரை அங்குலம் கனமுள்ளதாய்த் தேய்த்து மெருகிட்டு வைத்துக்கொள்ளவேண்டியது. இவ்வாறு செய்யப்பட்ட உரை கல்லுக்கு **கனகமோகனம்** என்று பெயராகும்.

### மருந்திழைக்கத் தக்கநீர்.

கோடை காலத்தில் பெய்யும் மழை ஜலத்தைப் பிடித்து வைத்துக் கொள்ளவும்.

### நீர்வைக்கும் பாத்திர விபரம்.

எலுமிச்சம்பழத்தை இரண்டாக அறுத்த பாதி பழத்தின் வடிவினையுடையதாய், பாதம் வைத்ததாய் தாம்பிரத்தால் செய்யப்பட்டுள்ளதாயிருக்கவேண்டும். இந்தப் பாத்திரத்திற்கு **சத்தகுண்டலம்** என்று பெயர்.

### உரைகல்லில் ஜலத்தை எடுத்துவிடும் கரண்டி விபரம்.

பாலைப்பழத்தை நீட்சியில் இரண்டு கூறாக்கி அதில் கூறு போன்ற உரு இருபுறமுள்ளதாய் நடுவிற் காம்பும் சேர்ந்து ஆறு அங்குலம் நீளமுள்ளதாய், தாம்பிரத்தாற் செய்யப்பட்டுள்ளதாய் இருத்தல்வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட கரண்டியால் நீரை முகந்து உரை கல்லில் ஒரு கரண்டிவைத்து

மருந்தை இழைக்க இருகண்களுக்கும் போதுமானதாகும். இக் கரண்டி, தூள் மருந்துகளை எடுத்து கண்ணில் போடவும் உபயோகப்படும். இதற்கு **நயனவேல்** என்று பெயர்.

அஞ்சனக்கோல் விபரம்.

செம்பு, வெள்ளி, தங்கம் இவைகளில் ஏதேனும் ஒன்றினில் அஞ்சு விரற்கடை நீளத்திற்கு மேற்படாமல் மத்தியில் மேடு வைத்து இருகடைப் புறங்களும் புஷ்ப முட்டை போல் திரண்டு மெலிந்திருக்கவேண்டும்.

காரீயக்கோல்.

அரிசித்திப்பிலி, தேன், பசுவின்நெய், பொன்னாங்காணிக்கீரை மிளகு, கோரைக்கிழங்கு, வெள்ளாட்டுப்பால், கோமூத்திரம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றலின் தோல் இவைகளையெல்லாம் அரைத்துக் காய்ச்சிய கஷாயத்தில் ஒரு பலம் காரீயத்தை ஒன்பது தடவை உருக்கிச் சாய்த்தெடுத்துப் பத்தங்குல நீளமுள்ளதாகத் திரட்டிக்கோலாகச் செய்து கொள்வாயாக. இவ்வாறு செய்யப்பட்ட கோல்களில் அஞ்சனத்தையெடுத்து, கண்ணில் தீட்ட வியாதிகள் நிலைநிற்காதோடும்.

கண்ணில் மருந்திடும் வகை.

கனகமோகனமென்னும் உரைகல்லை இடது கையிலேந்திக் கொண்டு, இரண்டு மூன்று துளி நீரைவிட்டு நன்ருய்த் தேய்த்து, அலம்பித் துடைத்துவிட்டு சுத்த குண்டலமென்னும் பாத்திரத்திலிருக்கும் சுத்த கெங்கையென்னும் மழை ஜலத்தை யாவது, முலைப்பாலையாவது அல்லது சமயோசிதமான அனுபானங்களையாவது நயன வேலென்னும் கரண்டியால் எடுத்து வைத்து லிங்கமென்றழைக்கப்படும் மாத்திரையை ஊன்றி, பெருவிரல் ஆட்காட்டி விரலாகிய இரண்டு விரல்களால் மாத்திரையைப்பற்றி ரவைகள் உதிராமல் இலகுவாயிழைத்து பிறகு கனகமோகனத்தை வலக்கரத்தில் மாற்றி இடதுகை ஆட்காட்டி விரலால் மருந்தை வழித்து வைத்துக்கொண்டு

மாத்திரைக்கோலை வலது கரத்தில்பற்றி இழைத்த மருந்தை கோலின் இருபுறங்களிலும் சமமாக எடுத்துக்கொண்டு, பிணியாளரின் இடது கண்ணில் முன்னம் மருந்தை வெள்விழியிற் றீட்டி, பிறகு வலது கண்ணின் வெள்விழியில் தீட்டி கண்களை மூடி விடவேண்டும். கணநேரம் கண்களை மூடிக்கொண்டிருக்கச்செய்து, பிறகு முழிக்கும்படிச் செய்தால் கண்களிலிருந்து நீர்வடியும். சிறிது நேரம் சென்றபின் கண்கள் குளிரும்.

மாத்திரையை இழைக்கும்போது மாத்திரையை கல்லில் தட்டலாகாது. தட்டினுல் ரவைகள் உதிரும். ரவைகள் விழும்படி மருந்தையிழைத்துக் கண்ணிலிட்டால் கண் சிவக்கும்.

பத்தியத்திற்கு ஆகும் பதார்த்தங்கள்.

பண்ணைக்கீரை, சிறுகீரை, பொன்னுங்காணிக்கீரை, முருங்கைக்கீரை, தகரைக்கீரை, கையாந்தகரைக்கீரை, குரிஞ்சாக்கீரை, மின்னைக்கீரை, வெந்தயக்கீரை, பருப்புக்கீரை, பசலைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, கருணைக்கிழங்கு, சுண்டக்காய், சுண்டைவற்றல், மணைத்தக்காளிக்காய், மணைத்தக்காளிவற்றல், அவரைவற்றல், வாழைப்பிஞ்சு, வாழைப்பூ, துவரம் பருப்பு, பாசிப்பயறு, எலுமிச்சை ஊறுகாய், நாரத்தை ஊறுகாய், நாரத்தம்பழம், மாதுளம்பழம், விளாம்பழம், பூவன் வாழைப்பழம், கொடிமுந்திரிப்பழம், பசும்பால், பசுவெண்ணெய், பசுநெய், தேங்காய்ப்பால், வெல்லம், கரும்பு சர்க்கரை, சீனக்கற்கண்டு வாதுமைப்பருப்பு, கோதுமை, புழுங்கலரிசி, பச்சையரிசி, தினையரிசி ஆகும். மற்றவை ஆகாதென அறிந்துகொள்வாயாக.

சுக்கையிட்டுக் காய்ச்சிய வெந்நீர் குடிக்கவேண்டும்.
வெந்நீர் விபரம்.

நீரை இரண்டிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்கப் பித்தம் நீங்கும்; மூன்றிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்க வாதம் நீங்கும். நாலிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்க கபம் நீங்கும்; எட்டிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்க அநேக வியாதிகள் நீங்கும்.

கண் அழன்றிருந்தால் இரவிலே பாலன்னம் புசித்துவிட்டு படுக்கையிலே உட்கார்ந்துகொண்டு உள்ளங்கால்களில் பசுநெய்யைத் தேய்த்து ஒரு தாம்பாளத்தில் தீட்டரிசித் தவிட்டைப் பரப்பி அதில் கால்களை வைத்தழுத்தி படுக்கையில் படுத்துக் கொள்ளவும். காலையில் எழுந்திருந்து குளிர்ந்த ஜலத்தால் காலைக் கழுவித் துடைத்துவிட்டு இழைத்த சந்தனத்தைப் பூசுவாயாக. இப்படிச் சிலநாட்கள் செய்து வந்தால் கண் குளிரும்.

## அதிகாரம் 5.

ஜீவகாருண்யத்தோடு நயனவிதி நூலைத் தமிழிலியற்றியிருக்கிற நூலாசிரியர்களெல்லோரும் கண்ணில் வரப்பட்ட நோய்களை தொண்ணூற்றாறாக வரையறுத்திருக்கின்றார்கள். அவையாவன

| | | |
|---|---|---|
| காசவகை | —8 | இவை 45-ம் கருவிழியிலுண்டாகும் வியாதிகள். |
| படலம் | —7 | |
| குமுதம் | —3 | |
| விழியுந்தல் | —3 | |
| திமிரம் | —7 | |
| கருவிழிவரி | —3 | |
| சுக்கிரன் | —5 | |
| நெரிசல் | —3 | |
| குந்தம் | —3 | |
| பூ | —3 | |

| | | |
|---|---|---|
| எழுச்சி | —5 | இவை 20ம் வெள்ளைவிழியிலுண்டாகும் வியாதிகள். |
| படர்த்தி | —3 | |
| நெரிசல் | —3 | |
| புற்று | —3 | |
| குமுளம் | —3 | |
| வெள்ளைவிழிவரி | —3 | |

| | | |
|---|---|---|
| பில்லம் | —3 | இவை 16ம் இமையிலுண்டாகும் வியாதிகள். |
| இமைத்தடிப்பு | —1 | |
| முடமயிர் | —1 | |
| இழிச்சக்கண் | —1 | |
| பற்பரோகம் | —3 | |
| கழலை | —3 | |
| இமைநீர்ப்பாய்ச்சல் | 1 | |
| சுற்றுக்குலைவு | —1 | |
| புழுக்கடி | —1 | |
| இமையுயர்ச்சி | —1 | |

| | | |
|---|---|---|
| கண்ணோக்காடு | —1 | இவை 15-ம் கடைக் கண்ணிலுண்டாகும் வியாதிகள். |
| பூசாந்திரம் | —2 | |
| நீர்ப்படர்த்தி | —3 | |
| இரத்தப்படர்த்தி | —4 | |
| தசைப்படர்த்தி | —5 | |

ஆக 96 வியாதிகள். தொண்ணூற்றாறு வியாதிகளையும் நாம் கண்டறிவதில்லை. அவைகளில் சில வியாதிகள் மட்டும் நமக்குப் புலப்படுகின்றன. எம்முடைய அநுபவத்தில் கண்டுணர்ந்த வியாதிகள் 14. அவையாவன 1. கண்ணோய் (Sore Eyes) 2. அமரம் (Baby's Sore Eyes) 3. வெண்ணோக்காடு 4. அன்னகோபம் 5. பில்லம் (Granulated Eye-lids) 6. படலம் (Pterygium) 7. குவளை விப்புருதி (Lachrymal abcess) 8. அக்கிரரோகம் (Herpes) 9. இரத்தப்படலம் 10. புழுவெட்டு (Absence of eye-lashes) 11. பித்தகாசம் (Cataract) 12. நேத்திரசூலை (Iritis) 13. பூ 14. முடமயிர் (Ingrowing Eyelashes) இன்னும் கண்ணில் வியாதி தோன்றியபோது இன்ன வியாதி என்றும் அதற்கு சாஸ்திர சம்மதமான சிகிச்சை இன்னதென்றுமறியாது கண்டனவற்றையெல்லாம் கண்ணினுட்பெய்து, வியாதியின் இலட்சணங்கள் கெட்டு பலவிதமான உபத்திரவங்களுக்குட்பட்டு வருந்துபவர்கள் கண்களையும், நோய்கள் முதிராதபொழுது அகாலங்களில் செய்யப்படும் சஸ்திரப்பிரயோகங்களினால் கெட்டகண்களையும், அநுபவ முதிர்ச்சியில்லாத பண்டிதர்களால் கெட்ட கண்களையும் எவ்வளவோ பார்த்திருக்கின்றோம்.

கண்ணோய் தொண்ணூற்றின் குணங்களெல்லாம் அகஸ்தியர் நயனவிதி ஐந்நூறில் கூறியிருப்பினும் எமதனுபவத்திற் கண்ட முற்கூறிய 14 வியாதிகளின் நுட்பங்களை யாம் லோகோபகாரமாக வெளியிடக் கடமைப்பட்டுள்ளோம்.

## 1. கண்ணோய் (Sore Eyes).

எந்நாளும் வாராது காற்றுக் காலம்
எடுக்குமே வலிகாணும் இமையும் வீங்கும்
புண்ணாகும் நீர்ப்பீளை உரங் கொட்டாது
புதுமையாய் மூன்றுநாள் போக நோகும்
விண்ணார நோக்க வொட்டாது பட்சமொன்றில்
விதமாகத் திருமிது தானு மென்று
கண்ணோவு குணங்க ளிவைதா னென்று
கருதினர் புவிமீதில் கண்டு தானே

இதன்பொருள் = இந்நோய் எக்காலங்களிலும் வாரது, மேல் காற்றுக்காலங்களில் உண்டாகின்றது. பொதுவாகக் கண்ணில் ஏற்பட்ட பிணிக்கு, கண்ணோய் என்று சொல்லப்படுவது போல் இந்நோய்க்கு கண்ணோயென்று ஆன்றோர் பெயரிட்டிருக்கிறார்கள். அதன் குணங்களோவென்றால் கண்ணில் வலியுண்டாகி இமைகள் வீங்கி கண்கள் புண்ணாகி, நீர் வடிந்து பீளை தள்ளி இரவிலே தூங்கவொட்டாமல், கண்களுக்குள் மணலைப் போட்டிருப்பதுபோல் உறுத்தி, மூன்றுநாள் வரையில் விபரீதமான தொந்தரவைக்கொடுக்கும். இந்நோயின் வயது 15 நாள் 15 நாட்களுக்குப் பிறகுதான் முடிவான நலமேற்படும். இந்நோய் கண்டால் உலகத்தவர் தகுந்த கண் மருத்துவரை யடுத்துப் பரிகாரம் செய்து கொள்ளாமலும் அதை ஏனைய கண் நோய்களுக்கு அடிப்படையானதென்றுணராமலும், நந்தியாவர்த்தப் பூவின்சாறு, முலைப்பால், விளக்கெண்ணெய், குடு கட்டிப்பூண்டின்பால், பழச்சாறு, நல்லெண்ணெய் முதலியவைகளை கண்ணினுட்பெய்தும், நாமக்கட்டி, கருவேலிலை கரிவளையல் முதலியவைகளைப் புறவளையமிட்டும் இவைபோன்ற எண்ணிறந்த முறையற்ற முயற்சிகளைச் செய்து வருகிறார்கள்.

இவ்வாறு செய்வதால் கண்களிலுள்ள சுவச்சநீர் முதலிய நீர்கள் கெட்டுப்போய் பூவிழுந்தும் பார்வைக்காதாரமான உறுப்புக்கள் கெட்டும்போகின்றன. நூல் ஆராய்ச்சி மிகுந்து அனுபவ முதிர்ச்சியுள்ள பண்டிதரிடம் ஒப்புவித்தால் இவ்வாறுகெடுவதற் கிடமில்லை. நிற்க, இந்நோயை பொதுவகையால் "கண்ணோய்" என்று நினைத்தலும் சரியே. எவ்வாறெனில் அன்னகோபம், பில்லவகை, இரத்தப்படலம் இவைகளும் கண்ணோயைப் போலவே நூற்பழக்கமில்லாதவர்களுக்கு வெளிப்படையாய் காணப்படும். ஆகையால் மாட்சிமை மிக்க இந்திய மக்களாகிய நமக்கு எல்லாவகைக்கும் ஏராளமான அநுபவ முறைகள் முனிவர்களாலேற்படுத்தப்பட்டிருக்கவும் அவைகளைக் கற்று ணர்ந்து கைதேர்ந்தவர்களுமேராளமாயிருக்கவும் நம்மக்கள் துன்பப்படுவது எதனாலேயோ? பாவம்!

## 2. அமரம் (Baby's Sore Eyes).

சிறு குழந்தைகட்கு கண்ணோய் உண்டானால் **அமரம்** எனப் படும்

கதிக்கும் இமையில் சதை வளர்ந்து கண்ணும் மூடித்திறவாது
பதிக்கும் விழியில் பரந்து குத்தி பலவாய்நீரும் பீளையிடும்
மதிக்குமெவரை நோக்கரிதாம் மலர்ந்த பூப்போல் சிவந்திருக்கும்
அதிக்கும் குணங்கள் இவைதானும் அமரமென்றுஅருளினரால்,

இதன்பொருள்—கண்ணிமைகளில் (Upper lids) சதை வளர்ந்து கண்கள் மூடிக்கொள்ளும். கண்விழியில் குத்தலுண் டாகி குழந்தை அழும். பலவிதமான நீர்வடியும்; அதாவது சீழ் போன்ற வெண்மையான நீரும் சில சமயங்களில் இரத்தம் போன்ற செந்நீரும் வடியும்; பீளைகட்டும்; யாரையும் பார்க்க முடியாது; மலர்ந்த மலரைப்போல் சிவந்திருக்கும். இவ் வித குணங்களோடு அமரம் என்னும் நோய் தோன்றும். அதற்குப் பரிகாரம் செய்யாமல் விட்டுவிட்டால் கண்கள் மூடிக் கிடத்தலால் காற்றோட்டமில்லாமல் கண்கள் புழுக்கமடைந்து பூ விழுந்துவிடும். சாத்திரத்திற் கூறிய மருந்தையே கண்ணி விடவேண்டும். கைப்பாகங்களாய் சிலர் மருந்துகளைப் போடுவ

துண்டு. சிலர் இமையைப் புரட்டிக்கொண்டு கையாந்தகரை முதலிய சுணையுள்ள இலைகளால் சதையைத்தேய்த்து இரத்தம் வாங்குவதுண்டு. பழக்கமில்லாதவர்கள் செய்தால் அபாயத்தை விளைவிக்கும். சுணைப்பத்திரங்(இலை)களைக் கொண்டு சதையைத் தேய்ப்பதற்கு "சரவணவிதி" என்று நயன சாத்திரங்கள் கூறும். சுணைப்பத்திரங்களாவன:—கையாந்தகரை, பவளமல்லிகையிலை, பராயிலை, தர்ப்பைப்புல், பூவரசம்பூவின் இதழ் முதலியனவாம்.

## 3. வெண்ணோக்காடு.

கூசுங்கடுக்கும் நீர்முட்டும் குளிர்ந்தசரீரம் எரிவுண்டாம்
மாசுங்கண்ணும் சிறுசிவப்பாம் மதியந்தன்னில் முழிக்காது
தேசுங்குன்றும் நடக்கவொட்டார் தியக்கக்குணங்கள் பலவாகும்
பேசுங்குண வெண்ணோக்காடு பேரிட்டழைப்பார் பெரியோரே.

இதன்பொருள்—கண்கள் கூசும், கடுக்கும், நீர் ததும்பும் உடலில் எரிச்சல் உண்டாகும். கண்கள் சிறுகச் சிவந்திருக்கும், நிலா வெளிச்சத்தில் விழித்துப்பார்க்க இயலாது. கண்களில் ஒளி குறையும், நடக்க முடியாது; அறிவு அடிக்கடி சலனமுண்டாகும் இவ்வித குணங்கள் இருந்தால் வெண்ணோக்காடு என்று பெரியோர்கள் பேரிட்டழைப்பார்கள்.

அநுபவம்—இந்த நோயானது நோயாளிக்கு மேற்கூறிய துன்பங்களைக் கொடுப்பினும் குளிர்ச்சியான கை பாகங்கள் எத்தனை உண்டோ அவைகளில் எதையேனும் ஒன்றைச் செய்யலாம். கண்களுக்கு சிறிது குளிர்ச்சியை உண்டு பண்ணினுல் நோய் நீங்கிவிடும். இந்த நோய்க்கு சில குளிர்ச்சி செய்யும் கைமுறைகளைச்செய்து பழகிய உலகத்தவர், "இந்த பிணியை நாம் நமக்குத் தெரிந்த மருந்தினுல் குணப்படுத்திவிட்டோம்; நமக்கு அருமையான கண்மருந்து ஒன்று கிடைத்துவிட்டது" என்று, கண்ணினுண்டாகும் நோய்கெல்லாம் பெரும்பாலும் கண்கள் சிவந்திருத்தல், நீர்வடிதல், கூசுதல், பீளை கட்டுதல் முதலிய பொதுக் குறிகளிருத்தலால் எல்லாம் ஒரே

நோய் என்று திரிபுபெற உளத்தில் கொண்டு மருந்திடத் தொடங்கி விடுகிறார்கள். இவர்கள் செய்யும் மருந்தும் மருத்துவமும் வெண்ணோக்காடு ஒன்றுக்கே பொருந்துமாதலால் அஃதல்லாத ஏனைய வியாதிகளுற்றபோது சீர்கெட்டு பலவித உபத்திரவங்களைக் கொடுத்து, கண்ணைக்கெடுத்து, பார்வையும்போய், வருந்தும்படி நேரிடுகிறது. கண் மருத்துவர்களே பிணிகளின் இலட்சணங்களை அறிவார்கள். ஆகையால் அவர்களை அடுத்து அவர்கள் சொற்படி நடக்கவேண்டும்.

## 4. அன்னகோபம்.

கனத்ததோர் நயனமுள்ளே கனலழ லெரித்துவிம்மி
உனத்தமாம் விழிபுடைத்து உலையினில் மெழுகுபோல
சினத்தது கண்ணும்நொந்து சிவந்து தானருகிற்றானால்
அனர்த்தமாம் அன்னகோபம் அறிந்துநீ மருந்துசெய்யே.

இதன்பொருள்—கண்ணுக்குள் எரிச்சலோடு விம்மி, விழி புடைத்து, கண்சிவந்து, உறுத்தலோடிருக்குமானால் அன்னகோபம் எனப்படும். இந்த நோய்க்கு இன்னமருந்திடுவது என்று நீ தெரிந்து பரிகாரம் செய்வாயாக. இல்லையாகில் மிக்க கெடுதியாய் முடியும். இந்நோய்க்கு கண்ணில் புறவளையமிட்டு கண்ணினுள் காரமில்லாத மருந்தையிடவேண்டும். கண் புண்ணாக விருக்குமாகில் காரமான மருந்து தாங்காது. துன்ப முண்டாகிவிடும். பண்டிதர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் சிகிச்சை செய்யவேண்டும்.

## 5. பில்லம் (Granulated Eyelids.)

இந்த நோய் நீர்ப்பில்லம் என்றும் சதைப்பில்லம் என்றும் இருவகைத்து.

### நீர்ப்பில்லத்தின் குணம்.

இமையைக்கடுத்து மேல்கனத்து இடுக்கிநீரும் பீளையிடும்
குமையச்சிவந்து வெளுப்புண்டாம் கூசிவிழியும் கீழ்நோக்கும்
சமையத்திரண்டு புருவங்கீழ்ச்சதையும்வளர்ந்து உறுத்துவிக்கும்
நிமையைத்திறக்கில் சதைமூடும் நீ இர்ப்பில்ல மெனலாமே.

இதன்பொருள்—இமையில் கடுப்புண்டாகி மேலிதழ் தடித்திருக்கும், கண் இடுங்கியிருக்கும், மிகுதியாக நீர்வடியும், பீளை கட்டும், ஒரு நாள் கண்கள் சிவப்பாயிருக்கும். ஒரு மருந்தும் கண்ணிலிடாமலே ஒரு நாள் தனக்குத் தானே வெளுத்துப் போம். கண்கள் கூசும். பார்வை பூமியைப் பார்த்த வண்ணமாயிருக்கும். மேலிமைக்குள் சதை திரண்டு வளர்ந்து உறுத்தலுண்டாகும். மேலிமையைப் புரட்டிப் பார்த்தால் சதை மூடிக் கிடக்கும். இவ்வகையான குணங்களிருந்தால் நீர்ப்பில்லம் என்று கூறப்படும்.

## சதைப்பில்லம் (Trachoma).

கருகிய இமையினுள்ளே கதித்த துர்மாமிசம்போல்
அருவியே உறுத்திநொந்து அதிகமாய்ச் சிவந்துகூசும்
மருவிய பூவும்தோன்றும் மாறாதே பீளைபாயும்
பெருகிய நீருமுண்டாம் பில்லமாமென்று சொல்லே.

இதன்பொருள்—இமையினுட்புறத்தில் தடித்த துர்மாமிசம் வளரும். கண்ணை இமைக்கும் பொழுதெல்லாம் வளர்ந்திருக்குந் துர்மாமிசமானது விழியில் அருவி, உறுத்தி நோவையுண்டாக்கும். கண்கள்சிவந்திருக்கும், கூச்சமுண்டாகும் கருப்பு விழியில் பூவுண்டாகும்; ஓயாமல் பீளைகட்டும்; ஏராளமான நீர் வடியும்; இப்படியிருந்தாலதற்குப்பில்லமென்று சொல்லுவாயாக. இவை இரண்டல்லாமல் **வரட்பில்ல**மென்று ஒன்றுண்டு. அதன் குணத்தையாவது நோயின் பெயரையாவது நயனவிதி 500ல் கூறுவிடினும் யாம் அநுபவத்திற்கண்டதை இங்ஙன் எடுத்துரைப்பாம். ஏனைய குணங்கள் ஒன்றுமேயின்றி, கண்ணிமையின் உட்புறத்தில் சதைமட்டும் வளர்ந்து, அதனால் உறுத்தலுண்டாகி கண்சிவந்திருக்கும். இலகுவில் சதையைக்கரைத்து சீக்கிரத்தில் இந்நோயைப் போக்கலாம். ஸ்ரீநாகமுனிவர் தமது நயனநூல் 200ல் 96 வகைப் பிணிகளையும் நீர், இரத்தம், சதை என்று மூவகையாகப் பிரித்திருக்கின்றார். உதாரணமாக, படலமென்ற நோயை நீர்ப்படலமென்றும், இரத்தப்படலமென்றும், சதைப்படலமென்று மூவ்வகைப் படலங்களாகவும், **படர்த்தி** என்ற பிணியை நீர்ப்படர்த்தி, இரத்தப்படர்த்தி, சதைப்

படர்த்தி என்ற மூவ்வகைப் படர்த்திகளாகவும், குவை என்ற வியாதியை நீர்க்குவை, இரத்தக்குவை, மாங்கிஷக்குவை என்ற மூவ்வகைக் குவைகளாகவும் கூறி இருப்பதுபோலவே பில்லத்தையும், நீர்ப்பில்லம், அமரப்பில்லம் (அமரம் என்பது துர்மாமிசம்) குடற்பில்லம் என்று மூவகையாகப் பிரித்திருக்கின்றார். இவை பொதுவாக கர்மரோகங்களில் ஒன்றாகும். அதற்கு வேண்டிய கர்மசாந்திகளையும், தேவாராதனைகளையும் செய்து மருத்துவம் செய்தால் ஒருவாறு நலத்திற்கு வரலாம். எமது அநுபவத்தில் உலகில் எத்தனையோ வகுப்பினர் இருக்க அருமறையோதிய அந்தணர்கட்கும், அவர்களுள் சிறப்பாய்ப் பெண்பாலருக்கும், திருக்க சாதியருக்கும் இந்நோய் உண்டாகி வாட்டி வருகிறது. காரணம் யாதோ அறிந்திலேம். ஆங்கிலக் கண்வைத்திய நிபுணராகிய மிஸ்டர் எலியட் என்ற ஐரோப்பியரும் இவ்வநுபவத்தை தான் கண்டதாக என் நண்பர் ஒருவரிடம் பேசியதாக யாம் கேள்விப்பட்டு மகிழ்ந்தனம். இதற்கு ஔடதப்பிரயோகமன்றி சஸ்திரப் பிரயோகமும் செய்வதுண்டு. இரத்தப் பில்லமாயிருந்தால் இரத்தக்குழலை ஊசியினால் குத்தி இரத்தத்தை வெளிப்படுத்துவதாகும். ஆங்கிலேய பண்டிதர்களும் இவ்வாறு செய்வதுண்டு. இஃதல்லாமல் அட்டையை விடுவதுமுண்டு. வைத்தியர்களும், ஏனையோர்களும் இப்பிரயோகத்தை எளிய செயலாகநினைத்து செய்து வருகிறார்கள். அட்டைவிதி என்று ஸ்ரீஅகத்தியனார் தனியாக ஒருநூலை ஏற்படுத்தி இருக்கிறார். அதில் பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆய நான்குசாதிகளையும், ஆண் பெண் என்ற பாற்பிரிவையும் கண்டுபிடித்து விலக்கியவற்றை ஒழித்து, கூறியவற்றைகொண்டு இரத்தத்தைப் போக்கவேண்டும். அதிலும் அமுத நிலையையும் கண்டு செய்தல் வேண்டும். ஆங்கிலரும் அட்டை விடுவதுண்டு. இந்த நோய்க்கு ஔஷத சஸ்திர முறைகள் ஒழிய இன்னும் எத்தனையோ பற்றுகளும், புறவளையமும், வேதுக்களும், நசியங்களும், வர்த்திப் புகைகளும், தைலங்களும் செய்யவேண்டியிருக்க நோய் இன்னதென்று அறியக்கூடாத பாமரர்கள் கண்ணின் நோக்காட்டைப் பார்த்து

பொதுவான கண் நோய் என்று நினைத்துத் தமக்கு தோற்றிய வற்றையெல்லாம் பிரயோகித்துக் கண்ணை நாசமாக்கி விடுகிறார்கள். இந்த நோய்க்குத் தகுந்த மருத்துவம் செய்பவர் சிலரே யாவர். இந்த நோய்க்குச் சிலபண்டிதர்கள் இமையைப்புரட்டி வைத்துக்கொண்டு துருசுயென்று சொல்லப்பட்ட (Blue Vitriol)ஐக் கொண்டு தேய்த்து விடுவதுண்டு. அப்படி தேய்க்கும்போது நோயாளிக்குக் கண்ணில் எரிச்சல் சகிக்க முடியாததாயிருக்கும். பில்லரோகத்திற்குத் துருசைக் கண்ணிலிட்டாலும் அல்லது துருசு கலந்த மருந்துகளைக் கண்ணிலிட்டாலும் கருவிழியில் பூவிழுந்துவிடும். இந்த நோய்க்குக் கண்ணில் பூவுண்டாதல் இயற்கைக் குணமாயிருக்க அதற்கு மருத்துவம் செய்யப் புகுந்தவர்களும் தாங்களிடும் மருந்தினால் பூவுண்டாகக் காண்பது, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதை யொக்குமன்றோ. இஃது இராக்கத சிகிச்சையாகும். இவ்வாறு பண்டிதர் நோயாளி ஆகிய இருவரும் சிரமப் பட்டும் நோய் விலகுவதில்லை.

## 6. படலம் (Pterygium).

1. நாகப்படலம். 2. வெள்ளைப்படலம். 3. இரத்தப் படலம். 4. நீர்ப்படலம் என்று நான்குவகைப் படலங்கள் உண்டு. இவற்றின் குணங்களை முறையே சொல்லுவோம்.

### 1. நாகப்படலம்.

கடைக்கண் இருபுறத்திலும் காணவே சிவப்புத்தோன்றி
துடைசதை போலவந்து சோதியைத் தின்னும் நாளில்
அடைந்திடும் விழிகள் தன்னில் அதிகமாய்ச் சிவந்துகூசும்
நடைபடி குணங்களெல்லாம் நாகமாம் படலமாமே.

இதன்பொருள்—இருகடைக்கண்ணிலும் சிவந்து, அழுத்தமான சதை வளர்ந்து வந்து, வெள்ளை விழி முழுவதையும் கடந்து, கருவிழியிலும் படர்ந்து கருவிழியின் நடுவிலிருக்கிற பாவையையும் நாட்செலச்செல மறைக்கும். கண்களில் நீர் வடியும். அரிப்புண்டாகும். இவ்வளவு குணங்களுமிருக்குமாகில் நாகப்படலமென்று கூறப்படும்.

## 2. வெள்ளைப்படலம்.

கண்ணினில் வெள்ளை தன்னில் கலந்ததோர் பாலினுடை
உண்ணியே விழிக்கும்போது உறுத்திடும் உரைத்துவைத்து
நண்ணிய பளிங்குபோல நலமயிர் புகைந்துகாட்டும்
வெண்ணிய மதிமுகத்தாய் வெள்ளையாம் படலமாமே.

இதன்பொருள்—பாலைக் காய்ச்சித் தோய்த்து வைத்திருந்தால் மேலே உண்டாயிருக்கும் ஆடையைப்போலக் கண்களை மூடித்திறக்கும்போதெல்லாம் உறுத்தும். சிலருக்கு பளிங்கைப் போல் வெண்ணிறமாயும் சிலருக்கு மயிரைப்போல் கறுத்துமிருக்கும். பார்வை புகைச்சலாயிருக்கும். இத்தகைய குணங்களிருக்குமாயின் அதை வெள்ளைப்படலமென்று சொல்லுவாயாக.

## 3. இரத்தப்படலம்.

கருத்திடுங் குமுறுங்காற்றால் கனத்திடும் பீளைபாயும்
எரித்திடுங் கண்களிரண்டும் இரத்தமே வீழ்ந்துகாட்டும்
நெரித்திடும் பிடரிஉச்சி நீங்கிடாக் குத்துக்காணும்
இரத்தமாம் படலமென்ன இயம்பினர் இனிதுமாதோ.

இதன்பொருள்—சரீரம் கருத்திருக்கும், வாயுவினால்சரீரம் கனத்திருக்கும், கண்ணில் பீளைபாயும், கண்கள் எரியும், கண்களில் இரத்தம் இறங்கிச் சிவந்திருக்கும், பிடரி, உச்சந்தலை இவைகளில் ஓயாத வலியிருக்கும், நாளாக நாளாக இரத்த நிறம் மாறிக் கருஞ் சிவப்பாக இருக்கும், மேற்கூறிய உபத்திரவங்கள் சிறிதேனுமின்றிக் கண்களில் இரத்தநிறம் மட்டும் பொருந்தியிருப்பதுண்டு. இந்தக் குணங்களிருந்தால் இரத்தப் படலமென்று பெயராகும்.

## 4. நீர்ப்படலம்.

சாலவே சிரசில்குத்தித் தாழிமை தடிப்புண்டாகும்
மூலமாம் கருப்புமீதில் முகில்பல மயக்கமுண்டாம்
ஆலவேல் விழியினாளே அருவிநீர் மிகுந்துவீழும்
மூலமாம் முனிவன்கூறும் உண்மைநீர்ப் படலமென்றே.

இதன் பொருள்—சிரசில் வலிஉண்டாகும். கீழிமை தடித்திருக்கும். கருப்புவிழியில் மேகம் படர்ந்தது போலிருக்கும், பார்வை பேதித்துக்காட்டும், கண்ணருவிநீர் ஏராளமாய் வடியும். இத்தகைய குணங்கள் கண்டால் நீர்ப்படலமென்று சொல்லப்படும்.

இவற்றுள் நாகப்படலம் விழியின்மேல் தோன்றும் நோய். இது வெளிப்பிணியென்பது வெளிப்படையாக யாவரும் காணக்கூடியதாயிருக்கும். உள் பிணி என்பது பார்ப்பவர்கட்கு நல்ல கண்ணைப்போல் தோற்றும், நயன பண்டிதர்களுக்கும் நோயாளிக்கும்மட்டும் நோயென்று தெரியக் கூடியதாயிருக்கும். இதற்கு நாகப்படலமென்று பெயர் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமானது. எவ்வாறெனில் விழியின்மேல் படர்ந்திருக்கும் சவ்வானது சற்றேறக் குறைய பாம்பைப் போலவே படர்ந்திருப்பதோடு சூரிய சந்திரர்களைக் கிரஹணகாலத்தில் இராகுகேது என்னும் பாம்புகள் மறைப்பதைப்போல் சவ்வானது நாட்பட, பார்வையை மறைத்து வருகின்றது.

## 7. குவளை விப்புருதி (Lachrymal abcess.)

நீர்விடுங்கடைக்கண் குத்தும் இமைகனம் சீயும்பாயும்
ஊர்வது மிகவுண்டாகும் உறுத்தியே சிவந்தெரிக்கும்
சீர்பெற விழிக்கவொட்டா சிறிதுநாள் குணமுங்காட்டும்
கூர்குணங்க ளிவைதான்காணில் குவளைவிப் புருதியாமே

இதன்பொருள்—கண்ணில் நீர் வடிந்து கடைக் கண்ணில் குத்தலுண்டாகும். இமைகள் கனக்கும், கடைக் கண்ணில் சிறு கட்டியுண்டாகும், அது உடைந்து சீழ்வடியும். அரிப்பு உண்டாகும். கண் சிவக்கும். சில நாள் குணமாயிருப்பது போலிருக்கும், இவ்வளவு குணங்களுமிருக்குமானால் குவளை விப்புருதியென்று சொல்லப்படும்.

குறிப்பு:—இதை அசாத்திய வியாதியென்று கூறப்படும். கடைக் கண்ணிலுண்டாகும் கட்டியானது உடைந்து விடுமானல் அதினின்றும் அமுக்கினல் சீழ்வெளிப்படும். இதற்கு சரியான பண்டிதமும் கூறப்படவில்லை. அகஸ்தியர் நயனவிதி 500ல்

நயனப்படுவனுக்குப் பற்று ஒன்று கூறியிருக்கிறார். அது படுவனுக்கு ஏற்பட்ட பற்று முறையாயிருந்தாலும் படுவனுக்கும் விப்புருதிக்கும் சிறிது பேதந்தானே என்று நினைத்து பிரயோகம் செய்ய சில சமயம் மருந்து பலித்திருக்கிறது. சில சமயம் பலிப்பதில்லை. இதற்கு மேனாட்டார் சிலகாலம்வரையில் அக்கட்டியைக்கீறி அதனுள்ளிருக்கும் சீழ் விளையும் படியான சிறு பையை எடுத்து வந்தார்கள். இப்போது அதை விடுத்து அக்கட்டியுண்டாகுமிடத்தில் மூக்கெலும்பில் துளையிட்டு வருகிறார்கள். அதனால் சீழ் சேரச்சேர நாசியின் வழியாய் வடிந்து விடுகிறது.

## 8. அக்கிரரோகம் (Herpis.)

மெய்க்கரப்புத்துக் கண்ணில் மேனிமை கனத்துப்புண்ணும்
உக்கிர மாகநொந்து ஊறியே நீரும்பாயும்
சிக்கறத்தினவும் பீளை சினந்துமே நொந்துகாட்டும்
அக்கிர ரோகமென் றறிந்தனர் புலவர்தாமே

இதன்பொருள்—கண்ணின் மேனிமை கனத்துப் புண்ணுகும். வலியுண்டாகி தண்ணீர்வடியும். பீளைசேரும். முகம்சிவந்து காணும். இக்குணங்களிருக்குமாயின் அக்கிர ரோகமென்று புலவர்கள் அறிவார்கள்.

குறிப்பு:—அக்கிரம் என்ற சொல்லுக்கு முதன்மை என்று பொருள்படும். இந்த ரோகம் கண்ணிலெழும் 96 ரோகங்களுக்கும் முதலில் வைக்கப்பட்டிப்பதுபற்றி அக்கிரரோகம் என்று அழைக்கப்படுகிறதுபோலும். இவ்வியாதிக்கு கண்ணினுள் மருந்து போடுவது கூடாது. மருந்து போட்டால் உபத்திரவங்கள் ஒன்றுக்கு நூறாய்ப் பெருகி கண்ணையும் கெடுத்து பார்வையையும் இழக்கச் செய்யும். மகா சந்தனாதி தைலத்தை ஸ்நானம் செய்துவந்தால் சூரியனைக்கண்ட இளம் பனிபோல் தீரும்.

## 9. இரத்தப்படலம் (Jaundice.)

கருத்திடுங் குமறுங்காற்றுற் கனத்திடும் பீளைபாயும்
எரித்திடுங் கண்ணிரண்டும் இரத்தமே வீழ்ந்துகாட்டும்

நெரித்திடும் பிடரிஉச்சி நீங்கிடா குத்துகாணும்
இரத்தமாம் படலமென்று இயம்பினர் இனிதுமாதோ.

இதன்பொருள்—சரீரம் கறுத்திருக்கும். வாயுவினால்சரீரம் கனத்திருக்கும். கண்ணில்பீளைபாயும். கண்கள்எரியும். கண்ணில் இரத்தமிறங்கி சிவந்திருக்கும். பிடரி, உச்சி, தலை இவைகளில் ஓயாத வலியிருக்கும் (நாளாக நாளாக இரத்த நிறம் மாறி கருஞ் சிவப்பாகயிருக்கும். மேற்கூறிய உபத்திரவங்கள் சிறிதேனு மின்றிகண்களில் இரத்தநிறமட்டும் பொருந்தியிருப்பதுமுண்டு) இந்தக் குணங்களிருந்தால் இரத்தப் படலமென்று பெயராகும்.

குறிப்பு—இதை மேனாட்டார் மஞ்சட் காமாலை என்று சொல்லுகிறார்கள். இந்த வியாதி தேகத்தில் மிதமிஞ்சின உஷ்ணமுண்டானபோது தோன்றுகின்றது. உஷ்ணத்தை தணித்தாலே தீரக்கூடியது. கண்ணிலும் மருந்திட வேண்டியது அவசியமே. அதற்கு எமதனுபவத்தில் கையாடுவது காசக் குளிகை என்ற மாத்திரையாகும். சந்திர சூரியர்களைப்பற்றிய கிரஹணம் சிறிது சிறிதாக விட்டு வருவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவது பார்ப்போருக்கு மட்டற்ற சந்தோஷத்தை விளைவிக்கும்.

## 10. புழுவெட்டு (Absence of eyelashes.)

நீட்டிய தினவுங்கூச்சம் நீர்வருமிமையும் வீக்கம்
கூட்டிடும் பீளைசேரும் குருமுளைபோலே தோற்றும்
நாட்டியே மயிருதிர்ந்து நற்சதை ரத்தம்வீழும்
காட்டிது மயிர்ப்புழுவெட்டு கண்டவ ருரைத்தவாறே.

இதன்பொருள்—இமையிலும் குவளையிலும் அரிப்புண் டாகும். கூச்சமிருக்கும். நீர்வடியும். இமைகள் வீங்கியிருக்கும். பீளைகட்டும். இமையிலும் குவளையிலும் சிறுமுளைகள் போல காணப்படும். இமையிலும் குவளையிலும் உள்ளமயிர்கள் உதிர்ந்து சதையில் இரத்தம் வடியும்.

இந்த வியாதியை சௌக்கியப்படுத்த எத்தனையோ சிகிச் சைகள் கூறப்பட்டிருப்பினும் எம்மிடம் பண்டிதம் செய்து கொள்ள ஆற்றலுடைய நோயாளிகள் கிடைக்கவில்லை.

மேற்கூறிய செய்யுளில் "இமையும்" என்று கூறப் பட்டிருப்பதால் இமையில் அரிப்பும், வீக்கமும், மயிர் உதிர்தலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் கீழ் இமையாகிய குவளையிலும் உள்ள ரோமங்கள் உதிர்ந்து அரிப்பு உண்டாகி, வீங்குதலும் இயற்கையாதலால் செய்யுளில் கூறியுள்ள இமையென்ற பதத்திற்கு மேல்இமை, கீழ்இமை என்று பொருள் கொள்ளல்வேண்டும். தூசி முதலியவை உள்ளே புகாமல் தடுப்பதற்காகவும் கண்ணினுக்கே ஓர் அழகு காரணமாகவும், எம்மிறைவனால் அமைக்கப்பட்டிருக்கும் ரோமங்கள் உதிர்ந்து இமைகள் தடித்து அரிப்பு உண்டாகி, இரத்தங்கட்டி கண்கள் கூச்சத்தோடு விழிக்கவொட்டாமல் அடிக்கடி மூடிமூடித் திறத் தலையும் கண்களில் பீளையோடும் பார்ப்பதற்கு எவர் மனந்தான் இளகாது? செந்தாமரைபோன்ற முகமாயிருப்பின் இந்த வியாதி வந்தவர்கட்கு அழகைக்கெடுத்து விகார ரூபமாக்கி விடுகின்றது.

## 11. பித்தகாசம் (Cataract.)

1 சினத்திடும் சிவப்பேயாகும் சிறுகவே பீளைகண்கள்
அனத்திடும் பீளைதோன்றும் அதிகமாய் சிவந்துகூசும்
சுனைத்தடம் சோனைமாரி சொரிதல்போல் நீரேதாவி
கனத்திடும் பைத்தியத்தின் காசமாய்க் கருதலாமே.

2 கண்ணினிற் காசம்வந்தால் கலங்கியே புகைந்துகாட்டும்
நண்ணிய வெள்ளைதன்னில் நரம்புகள் ஜலங்கள்கோர்த்தும்
விண்ணிலே நோக்கிப்பார்க்கில் விதனமும் மிகவுண்டாகும்
அண்ணிலே பித்தகாசம் அதுவழி பிறக்குமாறே.

3 பிறக்குமே காசந்தானும் பெருகிய மேகம்போல
மறைக்குமே கருப்பினுள்ளே வளர்சங்கு நிறமதாக
நிறக்குமே பித்தகாசம் நிச்சயமாகத் தானும்
துறக்கவே கடைக்கண் வெள்ளைதோன்றவே குத்திவாங்கே.

1 இதன்பொருள்—ஒருவனுக்குக் கோபம் உண்டாகும் பொழுது கண்களில் சிவப்பு உண்டாதல்போன்ற சிவப்பு உண் டாகும். கண்களில் சிறிது பீளைகட்டும், கூச்சமுண்டாகும்,

சுனையிலிருந்துஜலம்விழுதல்போலக்கண்களிலிருந்துஜலம்பாயும், இத்தகைய குணங்களிருப்பின் காசமென்று சொல்லப்படும்.

2 கண்ணில் காசம் உண்டானால் கண்ணானது கலக்கமடைந்து புகைந்துகாட்டும், வெள்ளைவிழியில் ஜலம் கோர்த்துக் கொள்ளும். ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால் வலியுண்டாகும். இவ்வித உத்பாதங்களோடு பித்த காசமானது உண்டாகும்.

3 இவ்வாறு பிறக்கும் காசமானது பெருகிய மேகம்போல சங்கு நிறமுள்ள நீராய்த்தோன்றி தாரையை மறைக்கும் அதாவது பார்வையும் மறைந்துவிடும். இக்குணங்கள் கண்டால் பித்த காசமென்று நிச்சயித்துக்கொண்டு கடைக்கண் பக்கமாய் வெள்ளை விழியில் குத்தி நீரை வாங்கிவிடு

அநுபவம்:—இந்நோயை உலக வழக்கில் மேகநீர் என்பர். ஆங்கிலேயர் இதை காட்டராக்ட் என்பர் (Cataract) முதற் செய்யுளில் "சுனைத்தடம் சோனை மாரி சொரிதல்போல் நீரே தூவி" என்று கூறியிருத்தலாலும் காட்டராக்ட் என்ற ஆங்கிலேய சொல்லுக்கு "ஜலம் வீழ்தல்" என்னும் பொருளாதலாலும் இதை ஆங்கிலேயர் காட்டராக்ட் என்றும் ஆயுர்வேதத்தோர் காசமென்றும் கூறுகின்றார். மேற்கூறிய செய்யுட்களில் கண்ட குணங்கள் யாவும் சிலருக்கு இருப்பதுண்டு; சிலருக்கு மேற்கூறிய குணங்கள் ஒன்றேனுமின்றி கண்ணில் மறைவு மட்டும் தோன்றும். நோய் ஆரம்பத்தில் சிறிது புகைச்சல் போலுண்டாகி நாளுக்குநாள் மறைவு அதிகப்பட்டுக்கொண்டே வந்து கடைசியாக கண்பார்வை முழுவதும் மறைந்துவிடும். இந்நோய்க்குப் பரிகாரம் இதுவரையில் சஸ்திரப்பிரயோகம் (Operation) ஒன்று தான் நடந்து வருகிறது. ஆப்பரேஷனோ சமான்யமல்ல. நினைத்த மாத்திரத்தில் செய்து கொள்ள முடியாது. கண்ணில் பார்வைசிறிதுமின்றி முற்றிலும் இருண்ட பிறகு மேகநீர் நன்றாய் உரைந்துவிட்டதாவென்று பரிசோதித்துப் பிறகு ஆப்பரேஷன் செய்வது சாஸ்திர சம்மதமான வழக்கம். அப்படி எல்லாம் சரிப்பட்டு வந்து ஆப்பரேஷன்

செய்து கொண்டால் அவர்கள் அதிர்ஷ்டத்திற்குத் தகுந்தாப் போல் சிலருக்குக் கண்தெரியும், சிலருக்குக் கெட்டுப்போவது முண்டு. சிலருக்கு கண்பார்வையும் போய் குத்தல் வலிமுதலிய உபத்திரவமுண்டாகி கண்கெட்டுப்போய் விகார ரூபமுண்டாகி விடுகிறது. அப்படிக் கெட்டவர்கள் அநேகரையும் காணலாம்.

## 12. நேத்திரசூலை (Iritis.)

கண் வியாதிகளெல்லாவற்றிலும் இந்நோய் மிகக்கொடுமை யானது. இது சரீரத்தில் வாயு முதிர்ந்து சூலையெனப் பெயர் பூண்டு கண்ணில் தாக்கும். சிலருக்கு கண்ணில் தாக்கியிருப்பது மன்றி சரீரத்தில் முழங்கை, முழங்கால் விரல் கணுக்கள், மணிக்கட்டு முதலான எலும்பு மூட்டுகளிலெல்லாம் வலியிருக்கும் நயன சாத்திரத்தில் கூறியிருக்கும் இந்த வியாதியின் குணங்க ளாவன.

"நயனத்தில் வாய்வுநின்று நவில்புருவத்திற் குத்தி
செயல்கெட விரணமுண்டாய்த் திரண்டுநீர் மூக்கில்விழும்
இயல்பினை யறிந்துகொண்டு இவ்வலி ரோகமாற்ற
அயனுரை செய்தவுண்மை மருந்துநீ யறிந்துசெய்யே"

தீருமே வாதநோவு சிவப்புண்டாய்க் கனத்துக்கண்ணை
சேருமே பரிக்குமாப்போல் தினவுடன் வலியுமுண்டாம்
நீருமே நணைத்துப்போட்டால் நின்விரல் உலர்ந்துகாணும்
சாருமே யிரவில்நோவு தானது மிகவுண்டாமே.

நேத்திர வாயுவுநின்று நெருங்கிய இடிஉண்டாகி
மாத்திர கண்சிவந்து வலித்திடுஞ் சிரசிற்குத்தும்
கேத்திர கேதஞ்சூகம் தம்பவம் கீசமுற்றி
நீத்திலா காசம்போல நின்முழி குருடதாமே.

இதன்பொருள்—கண் சிவந்திருக்கும். புருவத்தில் வலி யிருக்கும். மூக்கில் ஜலம் வடியும், கண் கனத்திற்கும் வேரோடு பிடுங்குவதுபோல் வலிதோற்றும். சிலசமயம் அரிப்புண்டாகும். கண்ணிலும் சில சமயம் ஜலம் வடியும், அந்த நீரை விரலில் தொட்டுப்பார்த்தால் அதி சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். இரவில்

வலி அதிகமாயிருக்கும். கண்ணிலிடியுண்டாகி சிரசில் குத்தல் வலியிருக்கும், கேத்திரம், கேதம், சூகம், தம்பவம், என்னும் வியாதிகள்முற்றி காசரோகங்களினால் கண்ணானது இருட்டுவது போல் கண்பார்வை போய் விடும். ஆரம்பத்தில் இந்த வியாதி கண்ணில் சிறு சிவப்பாயிருக்கும். உடனே முதற் செய்யுளில் கூறியபடி தகுந்த மருந்தை அறிந்துகொண்டு செய்யவேண்டும். அதற்கேற்ற மருந்தைத் தெரிந்து பண்டிதம் செய்யாவிடில் வியாதியானது நாளுக்கு நாள் முற்றி பார்வை போய்விடும். பார்வை போன பிறகு நோயாளியைக் கண்ணை மூடிக்கொள்ளும்படி சொல்லி முழியின்மேல் விரலால் அமுக்கிப்பார்த்தால் கல்லைப்போல் கடினமாயிருக்கும். சந்தேகமிருந்தால் மற்றொரு கண்ணை அமுக்கிப்பார்த்தால் இரண்டுக்கும் வித்தியாசந்தெரியும். பார்வைபோய் கண்முழியானது கடினமாயிருக்கும். இந்த ஸ்திதியில் அதை மேனாட்டு வைத்தியர் "Glancoma" என்பர். முற்கூறிய ஆங்கில சொல்லுக்கு (Hardening of the eye-ball). கண் விழி கடினமாயிருப்பது என்பது பிரதிபதமாகின்றது. நோயின் ஆரம்பத்தில் (Iritis) என்று சொல்லுவர். இது அநாதி காலத்திலேயே எம்முடைய தெய்வத் தன்மையுற்ற மகரிஷிகளால் கூறப்பட்டுள்ள செய்யுளுக்கும் எமது அநுபவத்திற்கும் மிகப்பொருத்தமுடையதாகவே இருக்கின்றது. பண்டிதத்தில்மட்டும் முற்றிலும் விரோதமாயிருக்கிறது. எந்த வகையிலென்றால் மேனாட்டு வைத்தியர் ஒரு கண்ணில் இந்த நோய் வந்தவுடன் அதற்கு (Iritis) என்ற பெயரிட்டழைத்து இதை விட்டு விட்டால் முதிர்ந்து மற்றொரு கண்ணைத் தாக்கி விடும் என்று கண்விழியை eye-ball கண்கூட்டினின்றும் (socket) எடுத்துவிட்டு கண்ணை ஆற்றிவிடுகிறார்கள். கட்குழி விகார ரூபமுண்டாக்காமல் பொய்க் கண் வைத்தும் விடுகிறார்கள். நாம்

---

கேத்திரம்—கெடித்தலம், க்ஷேத்திரம், பூமி, விளைநிலம்.
கேதம்—குற்றம், துக்கம், துன்பம், வீடு.
சூகம்—அம்பு, இரக்கம், ஊர்வன, காற்று, சுனைதாமரை, நெல்வால், [முன்மயிர்.
கீசம்—குரங்கு, குருவி, திருவாணம்.

எம்முடைய மகரிஷிகள் கூறியிருக்கும் நோயின் இலட்சணங்களையும் ஔஷத முறைகளையும், சிகித்ஸாக் கிரமங்களையும் கற்றுணர்ந்து தயாரித்து கையாண்டு வருகிறோம். நோய் ஆரம்பமாயிருந்தாலும் நோய் முற்றி பார்வை போன பிறகும் யாதொரு சஸ்திரப் பிரயோகமொன்றுமின்றி ஔஷதப் பிரயோகத்தாலேயே சௌக்கியப்படுத்தி வருகிறோம்.

## 13. பூ.

கண்ணில் பூ மூன்றுவித காரணங்களாலுண்டாகின்றது. வைசூரியினாலும், சரீரத்தில் ஏற்படும் அதிக உஷ்ணமான வியாதிகளாலும், துர்நீரினாலும், அவைகட்கு முறையே ஆணிப்பூவென்றும், உந்தல்பூவென்றும், வெண்புகைப்பூவென்றும் சாத்திரங்கள் கூறும். இன்னும் தெளிவாய்ச் சொல்லப்புகின், வைசூரியால் ஆணிப்பூவும், உஷ்ணவியாதியால் உந்தல்பூவும், துர்நீரினால் வெண்புகைப்பூவும் தோன்றும். இம்மூன்றினில் ஆணியும் உந்தலும் அசாத்திய ரோகமென்று ஆன்றோர் கூறியிருக்கின்றார். வெண்புகைப்பூ ஒன்றுமட்டும் தீரும் மற்றிரண்டும் தீராதென்க.

"பூவையே பூமூன்றென்று புகலும் பேரதனைக்கேளாய்
தாவு வைசூரியாலுந் தழலெழு வியாதியாலும்
மேவிய நீரினாலும் விழியிடை மூன்றுரோகம்
கூவிய ஆணியுந்தல் குழம்பிய புகையாமூன்றே"

"மூன்றினி லாணியுந்தல் அசாத்தியமென்பர் முன்னோர்
ஊன்றுவெண் புகைப்பூவொன்று மொழியுமென் றுணர்ந்து
கான்றெழு பூமூன்றுக்குங் கருதிய குணத்தைக்கண்டு [கொள்நீ
சான்றிடு மருந்துதன்னைச் சாற்றக்கேள் தையலாளே"

முற்கூறிய மூன்று வகையாலன்றி கண்ணிலெழும் ரோகங்களை இன்னவையென்றுணராது தகாதபிரயோகங்களைச் செய்தாலும் பூ விழுவதுண்டு. அப்பூ நயன பண்டிதர்களால் நிவர்த்திக்கக் கூடியதாயேற்படுமோ கூடாததாயேற்படுமோ யாம் அறியோம். அவரவர்கள் விதிப்பயனை ஒத்ததேயாம்.

இவ்வெண்புகைப்பூவிற்கு "நாகமுனி நயனவிதி இருநூறில்" கூறியிருக்கும் "பூவிற்குக் குளிகை" என்ற மாத்திரையே சிறந்த மருந்தாகும்.

## 14. முடமயிர்.

கனத்திமை தடித்துக்கண்ணும் கவிழ்ந்திடும் பார்வையாகும்
சினத்துடன் மயிருங்குத்தி தினவும் நீர்ப்பீளைசேரும்
இனத்துடன் பூவுங்காணும் இமையினில் மயிரும்நான்று
முளைத்திடு மாசங்தோறும் முடமயி ரென்னலாமே.
சூழ்முளைக்கு மிமையடங்கச் சுருண்டுகுத்தி நீர்வடியும்
தாழவிழிக்குங் கருமணியில் சற்றேவெளுக்கும் அடைந்துவரும்
ஆழவிழியு மடங்கிவரும் அதிகந்தலைநோய் நாசியினீர்
மூடவிழி தானரிதாகும் முடமயிரிது தாமெனலாமே.
பொருந்திடு மிமைமடிந்து நீரிறைற் புண்ணேயாகிச்
சரிந்திமை ரோமமுள்ளே சாய்ந்தது குத்திநோவாம்
தெரிந்திடு மணிவெளுத்துத் திமிரமே சேருங்கண்டாய்
அருந்ததி யிவ்வுரோக முடமயிர் சாத்தியமாமே.

இதன்பொருள்—கண்ணின் இமைகள் தடித்திருக்கும். கவிழ்ந்த பார்வையாகயிருக்கச்செய்யும். கண்கள் சிவந்திருக்கும். இமையிலுள்ள மயிர்கள் வளைந்து கண்ணுக்குள் உறுத்தும். அரிப்புண்டாகும், நீர்வடியும், பீளைகட்டும், கண்ணுக்குள் பூ உண்டாகும் பிரதிமாசமும் இமை மயிர்களுதிர்ந்து வளைவாகவே முளைக்கும்; இமைகளில் முளைக்கு மயிர்கள் சுருண்டிருப்பதால் அவைகள் முழியில் குத்தி நீர்வடியும், பூமியைப் பார்த்தவண்ணமாய் கண்ணை விழிக்கச்செய்யும், கண்கள் சற்று வெளுத்துக் காணும், விழிகளும் ஆழத்தில் போய்க் கொண்டிருக்கும், தலை வலிக்கும், மூக்கில் நீர்வரும், கண்ணைமூடுவது திறப்பது கஷ்டப்படும், இக்குணங்களமைந்த நோய்க்கு முடமயிர் என்னப்படும்.

இது சஸ்திரப் பிரயோகத்தால் தீரும், இது சாத்திய ரோகம், நூலிற் கூறிய விதமாய் சஸ்திரப்பிரயோகம் செய்ய வல்ல பண்டிதரை இக்காலத்தில் யாம் கண்டதில்லை; முற்காலங்களில் செய்ய வல்ல பண்டிதர்கள் ஏராளமாயிருந்ததாக எம் முன்னோரால் கேள்விப் பட்டிருக்கின்றோம். பண்டிதர்களை யாதரித்து வந்த சுதேச அரசர்களின்மையால் சாத்திரங்களும் அவற்றின் பயிற்சியும் மறைந்துகொண்டே வருகின்றன. எல்லாம் வல்ல இறைவன் என்று உதவிபுரிவரோ? சுபம்.

